விலை : 20.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 02 செவ்வாய்க்கிழமை (14.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 057

## 15 அரச நிறுவனங்களில் ரூ.11 ஆயிரம் கோடி நட்டம்

# நட்டத்திற்கு மகிந்த பதிலளிக்க வேண்டும்

## நிதியமைச்சர் ரவி குற்றச்சாட்டு



(கொழும்பு)

15 மாதங்களுக்குள் 15 அரச நிறுவனங்களில் 11 ஆயிரம் கோடி ரூபாயிற்கும் அதிகமான நட்டம் முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்திலேயே ஏற்பட்டதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க...

## பரபரப்பான நிலையில் தமிழகம்

# சொத்துக்குவிப்பு வழக்கில் இன்று காலை தீர்ப்பு!





23 ஆம் பக்கம் பார்க்க...

## ஐ.நா, ஐரோ பிரதிநிதிகள் விக்கியை சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இந்த வாரத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கவுள்ளனர்.

மேற்படி சந்திப்பின் நிமித்தம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டங் லாய் மார்க்வ் நாளை 15ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை வடக்குக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அவருடன் ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளர் உனா மெக்கௌலியும் விக்னேஸ்வரனை சந்திக்கவுள்ளார்.

வவுனியாவில் தமது அமைப்புகளின் நிதியுதவிகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை இதன்போது இருவரும் பார்வையிடவுள்ளனர்.

அத்துடன் கனகராயன் குளத்தில

23 ஆம் பக்கம் பார்க்க...

## ட்ரம்ப் நிர்வாகத்துடன் இலங்கை அதிகாரபூர்வ கலந்துரையாடல்

### நியூயோக்கில் நேற்று நடைபெற்றது

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய நிர்வாகத்துக்கும் இடையிலான முதலாவது உத்தியோக பூர்வ கலந்துரையாடல் ஒன்று நியூயோர்க்கில் நேற்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தி விசேட பிரதிநிதிகள் குழுவுக்கும், அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் பிரசாந்த் காரியவசம் ஆகியோருக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது, இரு நாடுகளுக்கு இடையிலான உறவு தொடர்பாகவும் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை

23 ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கைக்கான 2 வருட கால அவகாசம் தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகம்

## த.தே.ம முன்னணியின் தலைவர் சாடல்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டால் அது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

24 ஆம் பக்கம் பார்க்க...

## விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கை மீட்க பெரிதும் உதவியவர் கருணா!

### உதய கம்மன்பில புகழாரம்



(கொழும்பு)

கருணாவின் ஒத்துழைப்பு எமக்கு கிட்டியிருக்காவிட்டால் நாட்டின் கிழக்குப் பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளிடத்திலிருந்து மீட்கமுடியாது போயிருக்கும். அதனால்கருணா தலைமையில் கட்சி நிறுவப்படுவது சாலப்பொருத்தமான முய

24 ஆம் பக்கம் பார்க்க...

## பிரதமராக ரணில் இருக்கும்வரை ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கக்கூடாது–வாசுதேவ

(கொழும்பு)

ஜனாதிபதியின்நிறைவேற்று அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் வரைக்கும் இல்லாமலாக்கக் கூடாது என ஜனநாயக இடதுசாரி கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அரசாங்கத்தின் நடவ

24 ஆம் பக்கம் பார்க்க...

## கட்டுப்பாட்டு விலையில் அரிசி இல்லை

(கொழும்பு)

அரிசிக்காக கட்டுப்பாட்டு விலை அறிமுகம் செய்யப்பட்ட போதும் பெரும்பாலான பகுதிகளில் சந்தையில் கட்டுப்பாட்டு விலையின் கீழ் அரிசியை கொள்வனவு செய்யமுடியாத நிலை இருப்பதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான பகுதிகளில் அரிசி கிலோவொன்று 90 ரூபா முதல் 100

23 ஆம் பக்கம் பார்க்க...

## கேப்பாப்பிலவு மக்கள் போராட்டத்திற்கு தீர்வைத் தாருங்கள்

## ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவருக்கு வடக்கு சபையால் கடிதம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

சொந்த நிலங்களை மீட்பதற்காக கடந்த இரு வாரமாக இரவும் பகலுமாக போராடி வரும் கேப்பாப்பிலவு மக்களின் போராட்டத்துக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கும் படி வடக்கு மாகாண சபையால் அவசர கடிதம் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் அமைந்துள்ள விமானப்படையின் முகாமை அகற்றி மீண்டும் தங்களின் காணிகளை தங்களிடமே ஒபபடைக்க வேண்டும் என வலியுறுத்தி கடந்த பதின்னான்கு நாட்களாக இரவு பகலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு மாகாண சபை அமர்வின்

24 ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கில் நேற்று பரவலான மழை

## வறண்ட நிலங்கள் குளிர்ந்தாலும் விவசாயிகள் பலர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்றைய தினம் பெய்த பரவலான திடீர் மழையால் வறட்சியால் வறண்டு போயிருந்த நிலங்கள் குளிர்ந்தன. எனினும் காலம் தவறி பெய்த மழையால் விவசாயிகள் பெரும் நெற்பயிர் அழிவுகளை எதிர்நோக்கியுள்ளனர். இம்முறை வடக்கில் பருவகால மழை போதியளவிற்கு வாய்க்காமையால் விவசாயிகள் நெற்பயிர்களுக்கு நீர் இல்

23 ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

March, 2017 Intake
(Third Batch in Jaffna)

» Duration: 18 Months

» Entry Qualification

- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Part Time (Sundays only) class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from theTotal Payment.

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/ Library Computer Laboratory/ Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

(C-7537)


# மரண அறிவித்தல்



## திருமதி இளையபிள்ளை கதிரவேலு
## (சின்னம்மா தாமர்)

கரவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் முடக்காடு வீதி, நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையபிள்ளை கதிரவேலு நேற்று (13.02.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, இரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் கிருஷ்ணபிள்ளை, சண்முகநாதன், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, கிட்டிணபிள்ளை, கந்தசாமி, செல்லம்மா மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளினி, நந்தினி, குமரன், சாந்தினி, மணிவண்ணன், றமணி, செந்தில், மயூரன், ஜனகன், கபில்நாத், திவ்வியநாத், யாதவநாத், சாருகன், அபிசரன், மற்றும் காலஞ்சென்ற பரணீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முடக்காடு வீதி,
நெல்லியடி கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(C-7539)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் பரஞ்சோதி கண்ணன்

பரு.ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும், முன்னாள் வன்னி மாவட்ட MRS போக்குவரத்துச்சபை பொறுப்பாளரும், முன்னாள் வட மாகாண தனியார் - போக்குவரத்துத்துறை பொது முகாமையாளரும்.

மலர்வு
26 . 12 . 1974

உதிர்வு
14 . 02 . 2016

ஆனதைய்யா ஓராண்டு
அநாதையாய் நீர் எமைத்தவிக்க விட்டு
அணையுமா எம் நெஞ்சில்
என்றும் உன் அன்புத் தீபம்
அன்பே எம் கண்ணா!
ஆருயிரே நீ எங்கே?
அந்தரித்து நிற்கிறோம் – எம்
அஞ்சா நெஞ்சன் கண்ணனுக்கு

புன்னகை சிந்தும் உன்
பூரித்த நிறைமுகம்
பிரியாது என்றும்
எம் கண்களை விட்டு
உன்னுடன் உறிப்போன
எம் இதயம் என்றும்
பிரியாது எம் நெஞ்சங்களை விட்டு

கண்ணனை இழந்தோம் – எம்
கண்களை இழந்தோம்
காலனே நீ அன்று

காதலர் தினத்தில்
காதலே உருவான எம்
கண்ணனை பறித்தாயோ?
கருணையேதுமின்றி
கணத்தில் எமைவிட்டு


பண்புடன் வாழ்ந்து – பாரில்
பாசத்துடன் பழகி
நேசத்தால் எம்மை
நெகிழ வைத்து என்றும்
தேசத்தில் தெம்புதனை எமக்களித்து
தூரமது சென்றாயோ?
தேம்பி எமை அழவிட்டு
திரும்ப முடியாத பாதையில்...

வாடுகின்றோம் கண்ணா!
வருந்துகின்றோம் என்றும்
வணங்குகின்றோம் உனக்காய் – என்றும்
செலுத்தி நிற்கின்றோம் அஞ்சலியை...

உன் பிரிவால் வாடும் உன் குடும்பத்தினருடன்...
உன் ஆருயிர் சகோதர, சகோதரிகள், மைத்துனன், மைத்துனிமார், மருமக்கள், பேரன்மார், உறவினர், நண்பர்களுடன் பரஞ்சோதி - சூரியகாந்தி குடும்பத்தினர்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

(7938)




# சைற்றம் மருத்துவக் கல்லூரி குறித்து 15ம் திகதி பேச்சுவார்த்தை-ராஜித

(கொழும்பு)

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியுடன் தனக்கு தனிப்பட்ட வகையில் எந்தவொரு ஒப்பந்தமும் இல்லை எனவும், சைற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் மாணவர்களுடனும் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாளை 15 ஆம் திகதி தன்னுடன் அனைத்து பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்தார். (இ-7)

# அதிகாரப் பகிர்வு இனங்களை அடிப்படையாக கொண்டதல்ல

## அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு என்பது இனங்களை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சகல இனததவர்களுக்கும் நியாயத்தை வழங்கும் தேர்தல் முறைமை அறிமுகப் படுத்தப்படுவது அவசியம். வடக்கில் மாத்திரமின்றி தெற்கிலும் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்றும் அமைசசர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மலையகத்தில் 355 வீடுகள்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4000 தனி வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கமைய நேற்றுக்காலை நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவ பொகவனா தோட்டத்தில் அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது.

மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் 355 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

மலையக மக்களின் 200 வருட தொடர்வீட்டு வாழ்க்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் இந்தியாவில் இருந்து இறுதியாக வரவழைக்கப்பட்ட மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் இந்திய நிதியுதவியின் கீழ் இந்த புதிய வீடுகள் ஏழு பேர்ச் காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளன. (இ-7)

## தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக எனது குரல் ஒலிக்கும்

### பிரதி அமைச்சர் ரஞ்சன் தெரிவிப்பு

(கொழும்பு)

தவறிழைக்கும் அரச ஊழியர்களுக்கு எதிராக தமது குரல் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கும் என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

அரசாங்கத்தோடு தொடர்புபட்ட ஒருவன் என்ற வகையில் அரச அதிகாரிகள் இழைக்கும் தவறினை சுட்டிக்காட்டும் பொறுப்பு என்னிடம் இருக்கின்றது.

அரச சலுகைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நாட்டில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதுவரைகாலமும் சூழலுக்கு எதிராக செயற்படுவோருக்காக குரல் கொடுத்து வந்தேன். இனியும் குரல் கொடுப்பேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரச உறுப்பினர்கள் வீட்டுக்கு பணம் கொண்டு வரும் போது அவர்களின் மனைவிமார் மற்றும் பிள்ளைகள் பணம் எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் முறையான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேபோல் தவறிழைத்த மகிந்தானந்த அலுத் கமகேவின் நடவடிக்கைகளை அவரது முன்னாள் மனைவியான ஆஷா பெரேரா சுட்டிக்காட்டியதன் காரணமாகவே தகுந்த நடவடிக்கை எடுக்க முடிந்தது.

நான் தவறிழைக்கவில்லை. ஆனால் என்னைப் பற்றி சில அரசியல்வாதிகளும் ஊடகங்களும் தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அரிசி மாபியாக்களுடன் அரசு போட்டியிடும் நிலை

### அமைச்சர் சந்திம கவலை

(கொழும்பு)



அரிசியை . மறைத்து வைக்கும் மாபியாக்களுடன் அரசாங்கம் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கனியவளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி கவலையுடன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தனிப்பட்ட சிலரின் தேவைகள் கருதி அரிசியின் விலையை உயர்த்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

காலி, கரன்தெணிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் சந்திம வீரக்கொடி இந்த கருத்தை வெளியிட்டார்.

அதேபோன்று இன்றைய காலகட்டத்தில் ஊடக சுதந்திரம் அதிகளவிலேயே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவுடன் இனியும் சேர்ந்திருக்க முடியாது சு.க.

இரண்டு வருடத்துக்கென ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டரசாங்க உடன்படிக்கையை நீடிப்பதற்கு என்னுடைய எந்தவித உடன்பாடும் இல்லையென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

என்ன நோக்கத்துக்காக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாது போனாலும், நிறைவேறினாலும் இரண்டு ஆண்டின் பின்னரும் ஐ.தே.கவுடன் சேர்வதற்கு தனக்கு உடன்பாடில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

சைற்றம் குறித்து ஸ்ரீ ல.சு.க. யின் நிலைப்பாடு இன்னும் தெரிவிக்கப்படவில்லை. நான் கல்வி அமைசசராக இருந்த போதும் தனியார் பல்கலைக்கழகம் தொடர்பான பிரச்சினைகள் எழுந்தன. இருப்பினும், அதற்கு மாற்றமாகவே நாம் செயற்பட்டோம் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்கள்



## அமரர் வைத்திலிங்கம் அருந்தவமணி

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் புத்து வெட்டுவான் ஐயங்கன் குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட **அமரர் வைத்திலிங்கம் அருந்தவமணி** *12.02.2017* அன்று காலமாகி விட்டார்.

அன்னார் கணேசமூர்த்தி, சண்முகநாதன், அமரர் தங்கவேலு, கௌரீஸ்வரி, தெய்வமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாபவானி, அமரர் கோகுலராணி, பாதுஷா, திருச்செல்வம், நாகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திவாகரன், சர்மிளா, கோபிகா, யாதுஸ்சன், தேனன், விதுசன், வியூலன், வினிதன், விபுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2017 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஐயங்கன்குளம் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக ஐயங்கன்குளம் இந்துமயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7544)



## திருமதி யோகநாதன் ஸ்ரீகலா

சாவகச்சேரி சங்கத்தானை இரண்டாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட **திருமதி யோகநாதன் ஸ்ரீகலா** 12ஆம் திகதி அகால மரணமடைந்தார்.

அன்னார் முன்னாள் C.T.B ஊழியர் பாலசுப்பிரமணியத்தினதும் முன்னாள் சாவகச்சேரி தள வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் சிவபாக்கியத்தினதும் சிரேஷ்ட புத்திரியும் பூநகரி மட்டுவில் நாடு சோபாலபிட்டி கந்தையா - முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் யோகநாதனின் அன்பு மனைவியும் மனோகரன் (ரமணன்) (உகண்டா), Dr.ஜெகதாம்பாள் (ஜெகா) (டாக்டர் இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவி, சசி, சுசி, ஜெயா, டபி, பேபி (ஐரோப்பியநாடுகள்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அற்புதமலர் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), கமலாதேவி (பல்லவராஜன்கட்டு), நேரு (பூநகரி), பாரதிதாசன் (பூநகரி), ஸ்ரீகாந்தன் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கத்தானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 15ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல் :
நேரு (G.S) ஓய்வுநிலை,
பாரதிதாசன் ஓய்வுநிலை உதவித்
தபால் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

(7946)

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு
10 . 08 . 1948

இறப்பு
13 . 02 . 2017

## திருமதி
## புஸ்பமலர் குமாரசாமி


மாப்பாணவூரி, வலந்தலை காரைநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி **புஸ்பமலர் குமாரசாமி** நேற்று *(13.02.2017)* திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.02.2017 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாப்பாணவூரி,
வலந்தலை, காரைநகர் (7948)

தகவல் :
குடும்பத்தினர்



பிறப்பு
30 . 12 . 1937

இறப்பு
12 . 02 . 2017

## திருமதி யோகேஸ்வரன் விசாகம்மா

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி யோகேஸ்வரன் விசாகம்மா** (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் 12.02.2017 அன்று காலமாகிவிட்டார்.

இவர் அமரர்களான வல்லிபுரம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகளும், காலம் சென்ற யோகேஸ்வரனின் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) அன்பு மனைவியும், சோதிலட்சுமி (அமரர்), சந்தானலட்சுமி, பாக்கியலட்சுமி, திருஞானசம்பந்த சுவாமி (அமரர்), காசிவிசுவநாத சுவாமி (பூசகர் முத்துமாரி அம்மன் ஆலயம்), மாணிக்கவாசக சுவாமி (அமரர்), சுந்தரமூர்த்தி சுவாமி (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவராசா (சுவிஸ்), ஸ்கந்தராசா (அமரர்), திருமகள் (ஆசிரியை - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கலைமகள் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரி (சுவிஸ்), கருணாகரன் (அதிபர் - கள்ளப்பாடு அ.த.க பாடசாலை), கோடிஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பத்மநாதன் (அமரர்), சற்குணம் (அமரர்), தேருகாமணி (அமரர்), தர்மலிங்கம் (அமரர்), அமிர்தம்மா, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மேகலா, ஆதவன், பராந்தகன், அங்கைஜன், அங்கவி, கபினா, அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.02.2017 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 04 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்துமயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு :
ந.கருணாகரன் - 0778379289
யோ.தேவராசா - 00415262242674
10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

தகவல் :
குடும்பத்தினர்

(C-7541)

# கேப்பாப்பிலவு மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(தூம்பங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டம், கேப்பாப்பிலவு, பிலவுக் குடியிருப்பு மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் நல்லாட்சி அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன். அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

விமானப்படை வசமுள்ள தம்து சொந்த நிலங் களை விடுவிக்குமாறு கோரி கேப்பாப்பிலவு மக்கள் 14ஆவது நாளாகவும் முன்னெடுத்து வரும் போராட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கேப் பாப்பிலவு, பிலவுக்குடியிருப்பு மக்கள் தமது பூர்வீக நிலங்கள் விமானப்படை வசமுள்ளதாகவும் அதனை விடுவிக்குமாறு கோரியும் 14 ஆவது நாளாகவும் போராடி வருகின்றனர். அவர்களது கோரிக்கைகள் குறித்து நல்லாட்சி அரசு கவனம் செலுத்த வேண்டும்.

வடகிழக்கு தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்த விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தியிருந்தது. அப்போது, இது தொடர்பில் கலந்துரையாடலொன்று மேற்கொள் ளப்படும் என அரசு குறிப்பிட்டிருந்தது.

அம்மக்கள் நீண்டகாலமாக இவ்வாறான பொய் வாக்குறுதிகளினால் ஏமாற்றப்பட்டு கலந்துரையாடல்க ளில் நம்பிக்கையில்லாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சிறுபான்மை மக்களது ஆதரவோடு ஆட்சியில் அமர்த் தப்பட்டுள்ள நல்லாட்சி அரசுக்கு இந்த விடயத்தில் விசேட பொறுப்புள்ளது.

எனவே, இந்தப்பிரச்சினைக்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அதன் பொறுப்பாகும்.



30 வருட கால யுத்தத்தால் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ள இம்மக்களுக்கு தொடர்ந் தும் அசௌகரியங் களை ஏற்படுத்துவது சிறந்ததல்ல. நாட்டில் உருவாகியுள்ள சுத ந்திரக் காற்றை அம் மக்களும் சுவாசிக்க வேண்டும்.

அவர்களுக்கு வாழ்வதற்கும், விவசாயம் செய் வதற்கும் தேவை யான காணிகளை நல்லாட்சி அரசு வழ ங்க வேண்டும் என வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் பங்குச் சந்தை இலங்கையுடையது

## பந்துல கண்டுபிடிப்பு



தெற்காசியாவிலேயே மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் பங்குச் சந்தை இலங்கையின் பங்குச் சந்தையென கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச தரப்படுத்தலின் அடிப்படையில் இலங்கை பின்ன ணியில் காணப்படுவதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற் றுகையில் தெரிவித்தார். (இ-7)


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 11 1947



மறைவு 12 03 2012

அமரர் தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(எழுத்தாளர், ஓய்வுபெற்ற எழுது வினைஞர் - கல்வித்திணைக்களம்)

அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எமை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து ஐந்து ஆண்டு
ஆகிவிட்ட போதும் உங்கள் அறிவுரைகள்
காதினிலே கேட்கிறது...

கொத்தன்தறை, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்

(7943)






உடுவில் மகளிர் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மை யில் பாடசாலை அதிபர் பற் றிசியா அனித்தா தலைமை யில் இடம்பெற்ற போது விரு ந்தினர்கள் அழைத்து வரப்ப டுவதையும் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு சான்றிதழ் கள் வழங்கிக் கௌரவிப்ப தையும் படங்களில் காணலாம்.

# இராசி பலன்

14.02.2017
(மாசி 02, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு,
சதுர்த்தி முழுவதும்
உத்தரம் முற்பகல் 11.30 மணிவரை
சுபநேரம் 11.03 மணிவரை
இராகுகாலம் 3.33-5.03 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
அமிர்த சித்தம்
சர்வதேச காதலர் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம், சதயம் | | |
| புத | | | ராகு |
| | சனி | குரு | சந் |

**மேடம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், பிள்ளைகளின் தேவை யறிந்து பூர்த்தி செய்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பயணங்களின் போது பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவை களைப் பூர்த்தி செய்து மகிழ் வீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழி பட வேண்டிய நாள்.

**சிம்மம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறு துணை புரியும், நாவன்மை யால் நல்ல பெயர் கிடைக் கும், வாய்ப்புக்கள் தேடிவரலாம்.

**கன்னி** நீண்ட நாளைய விருப்ப மொன்று கைகூடும் வாய்ப்பு ண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியா கும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், முன்னேற் றம் கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**விருச்சிகம்** புகழ் பெற்றவர்களின் சந்தி ப்பு இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**தனுசு** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர் கள், நண்பர்களின் ஒத்து ழைப்புகள் கிடைக்கும்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாரா ட்டுக்கள் கிடைக்கும், வரம் தரும் தெய்வங்களை வழிப டச் செல்ல வேண்டிய நாள், யோசன சுகமுண்டு.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புகள் கூடும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண் டிய நாள்.

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங் கும் நாள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ் வீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.


# அநீதிகளை எதிர்த்தும் உரிய தீர்வு கோரியும் ஆசிரியர்கள் நேற்று யாழில் ஆர்ப்பாட்டம்







(படங்கள்: சோபிகா)




(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வியமைச்சினால் ஆசிரியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அநீதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வை வழங்கக் கோரியும் வெளிமாவட்ட சேவை நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் நேற்றைய தினம் செம்மணி வீதியிலுள்ள வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அலுவலக முன்றலில் தீர்வு கிடைக்கும் வரையான தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி தமது வெளிமாவட்ட




சேவை நிபந்தனைக் காலத்தைப் பூத்தி செய்த ஆசிரியர்களால் நடத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஆசிரியர்களை அச்சுறுத்தும் வகையில் செயலாளரை தாக்கியதாக பொய்யான ஜனநாயக விரோத குற்றச்சாட்டுக்களை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் சுமத்தி அடிப்படையான விசாரணைகள் எதுவு மின்றி - மூன்று ஆசிரியர்களுக்கு பணித்தடை வழங்கப்பட்டது. ஆனால் இன்று வரை அவ் ஆசிரியர்களை மீள இணைத்துக் கொள்வது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளையும் வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ளவில்லை. இவ்விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சரின் கவனத்துக்கு கவனயீர்ப்பு மூலமாக கொண்டுவந்திருந்த நிலையிலும் அதற்கான பதிலை கடந்த (06.02.2017) திங்கட்கிழமை வழங்குவதாகக் கூறிய நிலையிலும் முதலமைச்சரின் செயலகம் எவ்விதமான சாதகமான பதிலையும் வழங்கவில்லை.

வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரால் பொலிஸில் மேற்கொண்டிருந்த முறைப்பாட்டில் கூட செயலாளரால் குற்றங்களை நிரூபிக்க முடியாத நிலையில் சமரசத்தில் முடிந்துள்ளது. இருப்பினும் ஏன் பணித்தடை வழங்கப்பட்டுள்ளது

பொலிஸில் செயலாளரால் தன்னை தாக்கியதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிலும் வடமாகாண எதிர்க்கட்சித் தலைவரால் செயலாளரின் கொலரைப் பிடித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டிலும் உள்ள முரண்பாடுகளே ஆசிரியர்கள் மட்டில் வடமாகாண கல்வியமைச்சின செயலாளராலும் வடமாகாண கல்விப் பணிப்பாளராலும் வேண்டுமென்றே சுமத்தப்பட்ட பழி தீர்க்கும் நடவடிக்கை என்பது நிருபணமாகியுள்ளது.

இதன்மூலம் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர்.

அத்துடன் இடமாற்றச் சபையில் தீர்மானிக்கப்பட்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் - ஏனைய தீர்மானங்களுடன் தொடர்புடைய வெளிமாவட்ட கல்வி தொடர்பாக சிந்திக்காமல் அங்கு நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்களை விடுவிக்காமல் விட்டது இடமாற்றச்சபையின் தீர்மானம் என எமது தொழிற்சங்கத்தினையும் சாடி வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தப்பிக்க முயற்சிக்கின்றார்.

எனவே வடமாகாண கல்விப் பணிப்பாளரின் முறைகேடுகள் விசாரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு எமக்கு உரிய தீர்வு வழங்கப்படும் வரை தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம் என மேலும் தெரிவித்தனர். (இ-9)

## மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு நாளை

வதிரி திரு இருதய கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு நாளை புதன்கிழமை மு. ப 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி பார்த்தீபன் கலந்து கொள்வார். (இ-60)

யாழ்.செய்திகள்

## நிர்வாகத் தெரிவு

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இப் புதிய நிர்வாக சபைத் தெரிவில் யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவராக செ.ஜெயக்குமார், உப தலைவராக க.இலங்கநாதன், செயலாளராக க.செல்வச்சந்திரன், பொருளாளராக க.நாகேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக சி. அழகானந்தம், ம.ஜெயந்தன், தா.இராஜேந்திரம், இ.தவராஜா, செ.ஆனந்தரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(இ-9)





யாழ். வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் க.சிறீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ், சிறப்பு விருந்தினராக சோ.யாதவன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தனர். (படங்கள்: மகாலிங்கம்)

## சங்கடஹர சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை 4.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை இடம்பெற்று வசந்த மண்டபப் பூஜையுடன் விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ-12)

# சொத்து விபரங்களை வெளியிடாத 300 அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் எச்சரிக்கை


(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடாத அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் போது போட்டியிட்டு இதுவரையில் சொத்து விபரங்களை வெளிப்படுத்தாத 300 அரசியல்வாதிகள் தொடர்பிலான விபரங்கள் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் அரசியல்வாதியொருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அடுத்த தேர்தல்களில் போட்டியிட முடியாது.



கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் பிரதேச சபைத் தலைவர்கள், முன்னாள் மாநகர மேயர்கள், முன்னாள் நகரசபைத் தலைவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் உள்ளடங்குகின்றனர். பட்டியலிடப்பட்ட 300 அரசியல்வாதிகளைத் தவிர்ந்த கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஏனையவர்கள் சொத்து விபரங்களை ஒப்படைத்துள்ளனர்.

இதன்படி குறித்த அரசியல்வாதிகள் 300 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரசியல் கட்சிகளின் அதிகாரிகளுக்கும் சொத்து விபரங்களை வெளிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சொத்து விபரங்களை அறிவிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக சொத்து விபரங்களை வெளியிடத் தவறும் அரசியல் கட்சிகளின் அதிகாரிகள் தொடர்பிலான தகவல்களும் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வடி ரக வாகனம் பறிமுதல்



அனுமதிப்பத்திரமின்றி மரங்களை ஏற்றிச் சென்ற வடிரக வாகனத்தினை நெல்லியடிப் பொலிஸார் கைப்பற்றினர். இச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. நெல்லியடி பொலிஸார் ரோந்து சென்று கொண்டிருந்தபோது வதிரிச் சந்திப் பகுதியில் சென்று கொண்டிருந்த வடிரக வாகனத்தை மறித்து சோதனை செய்த போது அனுமதிப்பத்திரமின்றி அறுக்கப்பட்ட மரக்குற்றிகள் ஏற்றிச் செல்லப்பட்டமை தெரிய வந்ததையடுத்து அவற்றை மீட்டதாக நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். பி.ஏ.பிரியந்த தெரிவித்தார். (இ-3-60)

## துவிச்சக்கர வண்டியை திருடமுற்பட்டவர் கைது

நெல்லியடி நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியை கள்ளச் சாவி போட்டு திறக்க முற்பட்ட நபர் நெல்லியடி வர்த்தக சங்கத்தினரால் பிடிக்கப்பட்டு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. துவிச்சக்கர வண்டியில் கள்ளச் சாவி போட்டு திறக்க முற்பட்ட போது அதனை அவதானித்த வர்த்தக சங்கத்தினர் அவரை பிடித்து பொலிஸில் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

# இந்திய மீனவர்கள் 31 பேர் யாழில் உணவு தவிர்ப்புப்போர்

யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 31 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தினை நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தடுதது வைக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும், ஜனவரி மாதம் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 6 மீனவர்களும், இந்த மாதம் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 5 மீனவர்களும், இந்த மாதம் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 10 மீனவர்களுமாக மொத்தம் 31 பேர் தற்போது யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் தங்கச்சிமடம், இராமேஸ்வரம், கோட்டைபட்டினம் பகுதிகளைச் சேர்ந்த குறித்த மீனவர்களே நேற்றைய தினம் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தாம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தமது குடும்பங்களை இழந்து பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகளை விடுவிக்குமாறும் வலியுறுத்தியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர். (இ-9)



யாழ். மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் யோ.எ.பங்கிராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச பொது வைத்திய சுகாதார அதிகாரி ஸ்ரீ ஹிந்துஷா கலந்து கொண்டார்.

# உரிமை கோரப்படாத சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சு.ஆறுமுகம் (வயது 90) முகவரி ஏ.ஜெகநாதன், 130/12, குட்செட் வீதி, வவுனியாவைச் சேர்ந்த ஆண். 29.01.2017 அன்று காலை 8.20 மணியவில் விடுதி இல. 24இல் அனுமதிக்கப்பட்டிருந்தார். அன்றிலிருந்து உறவினர்கள் யாரும் பார்க்க வராத பட்சத்தில் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு 08.02.2017 ஆம் திகதி ரெலிமெயில் அனுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காது 13.02.2017 ஆம் திகதி காலை 5.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலத்தை உறவினர் எவரும் உரிமை கோராத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளது.

எனவே அச்சடலத்தை உறவினர்/உரித்துடையோர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR
தொ.இ: B/6921

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/வியாபாரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/6922

பிறப்பு: 1976 RC
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L அவுஸ்திரேலியா PR
எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர்
தொ.இ: B/6923

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:பட்டதாரி லண்டன் PR
தொ.இ: B/6925

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 19
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:HNDIT/ வங்கியாளர்
தொ.இ: G/6942

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/6943

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
தகைமை தொழில்: BA/போதனாசிரியர
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6945

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 38 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA, MBA/ ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6947

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# இன்று முதல் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவுமாவட்டத்தில்உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம் பெற்று வரும் காணி விடுவிப்பு போராட்டம் நேற்று திங்கட்கிழமையுடன் பதினொராவது நாளாகவும் தொடர்கிறது. இப்போராட்டத்திலீடுபட்ட மக்கள் நேற்று புதுக்குடியிருப்பு செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை ஆரம்பித்த வேளையில் அவ்விடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளரிடம் தாங்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்த மக்கள் தாம் வழங்கிய காலக்கெடு முடிவடைந்து விட்டதாகவும் தெரிவித்தனர்.




இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர், இதற்கான எந்தவிதமான பதிலும் தமக்கு கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

இந்த நிலையில் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படாத நிலையில் போராட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் இன்று முதல் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்போவதாக தெரிவித்தனர்.

19 குடும்பங்களுக்கு சொந்தமான சுமார் 49 ஏக்கர் காணிகளிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு தெரிவித்தே மக்கள் இந்த தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக மக்கள் உறவினர் வீடுகள் மற்றும் வாடகை வீடுகளில் வசித்து வருவதுடன் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தொடர் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்த போதும் கடந்த 7 வருடங்களாக தீர்வு எதுவும் முன்வைக்கப்படாத நிலையில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-15-281)

## பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு விமானப்படை முகாமுக்கு முன்பாக நேற்று 14 ஆவது நாளாகவும் நில மீட்பு போராட்டம் தொடர்ந்து வரும் நிலையில் பல்வேறு தரப்பினரும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

அந்தவகையில் நேற்றையதினம் சட்டத்தரணிகள் சங்கம், மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம், புத்தளம் மகளிர் அமைப்புக்கள், கத்தோலிக்க மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள் என பலதரப்பினரும் ஆதரவு வழங்கி மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சி. சிவமோகன், திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்டோரும் நேற்றைய தினம் போராட்டத்திற்கு வருகை தந்து தங்களின் ஆதரவை வழங்கியிருந்தனர். (5-281)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

கிளி.பரமன்கிராய் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் க.நடேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் சு.தர்மரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக திருமதி வி.சுகந்தன், செ.புவிபாலசிங்கம், கௌரவ விருந்தினராக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் பா.ஸ்ரீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவு உட்பட ஏனைய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 23 கிராம அலுவலகர்கள் பிரிவுகளில் இதுவரை காலமும் சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்த கிராமங்களில் வாழும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிகள் வழங்க ஆவன செய்யுமாறு சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையடங்கிய கடிதத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவில் 23 கிராம அலுவலகர் பிரிவுகளில் வசிக்கும் சுமார் 6,205 குடும்பங்களுக்கு மேல் சமுர்த்திக் கொடுப்பனவு இன்றுவரை வழங்கப்படாதுள்ளது.

இவ்வாறு இம் மக்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவு வழங்காமைக்கான காரணமாக இன்றுவரை கூறப்படுவது இம் மாவட்டத்திற்கு சமுர்த்தி அனுமதிக்கப்பட்ட காலமான கடந்த 2011 ஆம் ஆண்டு குறித்த 23 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு வாழும் எந்தக் குடும்பத்திற்கும் இதுவரை சமுர்த்தி அனுமதிக்கப்படவில்லை.

இதனால் இங்கு வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் மாற்றுவலுவுடையோர் தலைமைக் குடும்பங்கள் உள்ளிட்ட மிக வறுமை நிலையில் உள்ள மக்கள் வாழ்வாதாரத்திற்கு மிகவும் அல்லல்படுவதால் இவர்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கடந்த 05 ஆண்டுகளாக சகல தரப்புக்களிடமும் கோரிக்கை விடப்பட்டிருந்தும் கொடுப்பனவு மட்டும் இதுவரை வழங்கப்படவேயில்லை. எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (5-15)

## மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளியுங்கள்

கேப்பாப்பிலவு - பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டமானது 14 நாட்களாக தொடர்கின்றது. மக்கள் இப்படி தொடர்ந்து துன்புறுகையில், இவர்களுக்கான தீர்வுகள் இன்றுவரை கிடைக்கவில்லை.

நாளாந்தம் பல பக்கத்தாலும் மக்கள் திரண்டு வந்து ஆதரவுகள் குவிந்த வண்ணம் உள்ளன. இருந்தும் இந்த மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஏற்கனவே வருகை தந்த ஒவ்வொரு அமைப்புக்களின் பிரதிநிதிகளிலும் இருவர் அல்லது மூவர் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கேப்பாப்பிலவு போராட்டக்களத்துக்கு வருகைதந்து அடுத்த நடவடிக்கை என்ன செய்யலாம் என பதை கலந்துரையாடுவதற்கு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாகாணசபை உறுப்பினர்களும் வருகை தந்து, ஆலோசனைகள் தந்து உதவும் வண்ணம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (5-28)







நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் 142 மாணவர்களுக்கு ரூபா 300,000 பெறுமதியான கற்றல், காலணிகள் என்பன கொழும்பு றோயல் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் சோதிலிங்கம், அவரது அணியினரால் அண்மையில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன், வைத்திய கலாநிதி. ஜெயராஜா மற்றும் வித்தியாலய முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: மாங்குளம் செய்தியாளர்)

# தகுதியானவர்களுக்கே நியமனம்

## மஸ்தான் எம். பி. தெரிவிப்பு



அரச நியமனங்கள் வழங்கும் கல்வித் தரத்தை வடக்கு மாகாணத்திற்கு வெளியே ஒப்பிடுவது பொருத்தமற்றது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

கல்வித்தாரை முழு நிலாக் கலை விழாவும் சாதனையாளரை மேன்மைப்படுத்தும் நிகழ்வும் அண்மையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரச நியமனம் வழங்கும் போது, இப் பிரதேசத்தில் வசிக்கும் தகுதியானவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அவர்களின் கல்வித் தரத்தினை வடக்கு மாகாணத்திற்கு வெளியே காணப்படும் உயர் கல்வித் தரத்துடன் ஒப்பிடுவது பொருத்தமற்றது. ஏனெனில் எமது பிரதேசம் முப்பது வருட அசாதாரண சூழ்நிலைக்குட்பட்ட நிலையில் காணப்பட்டதை உயர் மட்ட நிலைசார் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளேன் என தெரிவித்தார். (2)




# தனியார் பேருந்துகளுக்கு

# விசாரணைக்குழுவின் அறிக்கையின் மூலம் நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் விரைவில்



முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு தம்மால் நியமிக்கப்படவிருக்கும் 3 பேர் அடங்கிய விசாரணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையிலும், அமைச்சினால் மேற்கொள்ளப்படவிருக்கும் கள ஆய்வின் அடிப்படையிலும் எந்தவொரு உரிமையாளரும் பாதிக்கப்படாவண்ணம் நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுடனான சந்திப்பு அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவை வழங்கும் 89 பேருந்து உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

குறித்த சந்திப்பில் சேவை வழங்குநர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் ஆலோசனை நடத்தினார். அவற்றில் முக்கிய பிரச்சினையாக வழித்தடங்கலில் அளவுக்கு அதிகமான பேருந்துகள் காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் சேவை வழங்குவதற்குரிய செலவீனத்தைக்கூட பெறுவதல் சிரமத்தினை எதிர்நோக்குவதாகவும் வழித்தடத்தில் சுழற்சி முறையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் எண்ணிக்கையை குறைக்குமாறும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவ்விடயம் தொடர்பாக உரிமையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சரிடம் வழித்தடங்கலில் அதிக பேருந்துகள் காணப்படுவதற்குரிய காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

அதில் குறிப்பாக சேவை வழங்குநர்களில் மூன்று பிரிவினர் காணப்படுவதாகவும் அவர்களில் இறுதி யுத்தத்தின்போது தமது பேருந்துகளை முள்ளிவாய்க்கால் பகுதியில் விட்டுச்சென்றவர்கள் ஒரு பகுதியினராகவும், நீண்டகாலமாக சேவையில் ஈடுபடுபவர்கள் மற்றுமொரு பகுதியினராகவும், மீள்குடியேற்றத்தின் பின்னர் சேவையினை வழங்குபவர்கள் வேறொரு பகுதியினராகவும் சுட்டிக்காட்டப்பட்டதோடு இதன மூலமே அதிகமான பேருந்துகள் காணப்படுவதும் இனங்காணப்பட்டது.

அதன்போது இப்பிரச்சினைக்குத்தகுந்த பொறிமுறையை ஏற்படுத்துவதற்கும் தீர்வினை வழங்குவதற்கும் தம்மால் மூன்று பேர் கொண்ட விசாரணைக்குழு ஒன்று வருகின்ற வாரத்தில் அமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் அவர்கள் ஒவ்வொரு உரிமையாளர்களையும் விசாரணை மேற்கொண்டு தமக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்றும் ஒவ்வொரு வழித்தடத்திலும் எத்தனை பேருந்துகள் பயணிக்கமுடியும் மற்றும் சேவை வழங்குநர்கள் நட்டமடையாமல் இருப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் போன்ற விடயங்கள் அமைச்சின் ஊடாக கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவை இரண்டின் அடிப்படையிலும் எந்தவொரு உரிமையாளரும் நட்டம் அடையாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தோடு நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-281)

# நில மீட்பு போராட்ட மக்களுக்கு வட்டு.இந்து வாலிபர் சங்கம் ஆதரவு




முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் நில மீட்புக்கான சத்வீக போராட்டத்துடன் வட்டு. இந்து வாலிபர் சங்கமும் இணைந்து கொண்டு ஒரு தொகுதி உலருணவுப் பொருட்களையும் சமைத்த உணவு பாசல்களையும் வழங்கி வைத்துள்ளதுடன் அவர்களுடன் வட்டு. இந்து வாலிபர் சங்க உறுப்பினர்கள பங்கு பற்றி தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை 13 ஆம் நாளாகவும் தொடர்ந்துள்ள போராட்டத்தின் போதே உதவிப் பொருட்களை வழங்கி வைத்துள்ளதுடன் தமது ஆதரவை வழங்கியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிழ் புலம்பெயர் அமைப்பான லண்டனைச் சேர்ந்த "எதிர்காலத்திற்கான பாதை" என்ற அமைப்பு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக கேப்பாப்பிலவு மக்களுக்கு அவர்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மதிய உணவு பொதிகளையும் உலருணவுப்பொருட் களையும் வழங்கியுள்ளது. (5-15)

# சுமந்திரனைக் கொல்லச் சதி ஐவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பரந்தன்)

சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்தமை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொலை செய்யச்சதித்திட்டம் தீட்டியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் எதிர் வரும் 27 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறும் அதேவேளை இரண்டாவது சந்தேக நபரை வெளியில் கொண்டு சென்று விசாரணை மேற்கொள்வதற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அவர்களுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளிலும் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இன்று குறித்த மூன்று வழக்குகளையும் 85 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் மூன்று வழக்குகளையும் ஒரு வழக்குகளாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நபர்கள் மேற்படி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் இவர்களிடம் மீளவும் வாக்குமூலங்கள் பதிவு செய்ய வேண்டியிருப்பதாகவும் பயங்கரவாத தடுப்புப் பொலிஸார் அனுமதி கோரியிருந்தனர்.

இதனை கவனத்தில்எடுத்த மன்று இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய நாட்களில் குறித்த ஐந்து பேரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் வைத்து வாக்குமூலங்களை வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இரண்டாவது சந்தேக நபரை வெளியிடங்களுக்குக்கொண்டு சென்று சில விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அதற்கான அனுமதியையும் கோரியிருந்தனர்.

குறித்த சந்தேக நபரை 20, 21, 22 ஆகிய திகதிகளில் காலை எட்டு மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை சிறைச்சாலை உத்தியோகத்தருடன் சிறைச்சாலையிலிருந்து வெளியில் அழைத்துச்சென்று விசாரணைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை குறித்த சந்தேக நபர்களையும் வெளியில் சென்று விசாரிப்பதற்கு உரிய பாதுகாப்பில்லை என்றும் இது சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளாகவே இருக்கின்றன.

இவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று சந்தேகநபர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளான திருமதி எஸ்.விஜயராணி, அர்ச்சுனா ஆகியோர் மன்றில் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் குறித்த வழக்கு பதிவேடுகளை பதிவாளரின் பாதுகாப்பின் கீழ் வைத்திருக்கவும் மன்று உத்தரவிட்டுள்ளது. (5-312)

# வீதி விபத்து மூவர் காயம்

(மன்னார் )

மன்னார் பொலிஸ் நிலைய பிரிவில் உள்ள நானாட்டான் பிரதான வீதியில் ஆட்டோவும், மோட்டார் சைக்கிளும் மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் மூன்று பேர் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நானாட்டானில் இருந்து மன்னார் நோக்கி சென்றுகொண்டிருந்த ஆட்டோவுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மன்னார் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வருகின்றது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் ஆட்டோவின் சாரதியும் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-15)

# கற்றல் உபகரணம் வழங்கல்



வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் ம.ஆனந்தராஜ் தனது நிதியிலிருந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சண்முகபுரம் கிராமத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் விளையாட்டுக் கழகத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் மற்றும்அறநெறி பாடசாலை ஆரம்ப கட்டட நிதிக்கு ஒரு தொகை பணத்திற்கான காசோலை ஆகியன வழங்கி வைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந் நிகழ்வு நடைபெற்றபோது அறநெறி பாடசாலை மாணவர்கள் 32 பேருக்கு கற்றல் உபகரணப் பொதிகளையும் விளையாட்டுக்கழக வீரர்களுக்கான விளையாட்டு உபகரணங்களையும் அறநெறி பாடசாலை ஆரம்ப கட்டட நிதிக்கு ஒரு தொகை பணத்திற்கான காசோலையும் வழங்கி வைககப்பட்டுள்ளது.

இந் நிகழ்வின்போது, வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் ம.ஆனந்தராஜ், ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பூசகர் மு.கணேசன், அறநெறிப்பாடசாலையின் ஆசிரியர் தே.தட்சாயினி, சனாதன சன்மார்க்க பீடாதி சிவதர்சன் குருக்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.ராகவன், சிறுவர் பாதுகாப்புத் தலைவி கமல குமாரி, மாதர் சங்கத்தலைவி துஷ்யந்தினி மற்றும் அப் பகுதி மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். (5-15)





யாழ். எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் ச.கமலதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம். சத்தியசீலன், தீவக வலயத்தின் உடற்கல்விப்பணிப்பாளர் எம்.லோகநாதன், கௌரவ விருந்தினராக வித்தியானந்தாக் குருக்கள் மற்றும் இராஜசிங்கம் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





மானிப்பாய் Butterfly முன்பள்ளி, பண்டத்தரிப்பு Blooming Buds முன்பள்ளி ஆகிய ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கலை விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.







யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரியின் தற்காலிக வகுப்பறைக் கட்டத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டுமங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் திறந்து வைப்பதையும் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.







Feed the Poor உணவளிப்போம் அமைப்பால் யாழ்ப்பாணம், கோப்பாய் மத்தியைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் திலக்ஷன் எனும் 14 வயது சிறுவனுக்கு BLADDER OUTLET OBSERVATION, TREATMENT AND CYSTOSCOPY SURGERY என்னும் சத்திரசிகிச்சைக்கு ரூபா 150,000 கோப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து உதவி பிரதேச செயலரின் ஊடாக அண்மையில் வழங்கப்பட்டது. அத்துடன் புத்தகப்பை, பாடசாலைக் காலணிகள் என்பனவும் அக்குடும்பத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டன.



அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக உறுப்பினர்களான திருக்குமரன் லஜிதன் ஞாபகார்த்தமாக யாழ். அளவெட்டி அ.மி.த. க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக் கான வெற்றிக்கிண்ணங்கள் பாடசாலை நிர்வாகத்திடம் அண்மையில் கழகத்தலைவர் வசீகரன், ஒருங்கிணைப்பாளர் சி.ரகுபாலன் மற்றும் கலாசார பொறுப்பாளர் லவன்ராஜ் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)





யாழ்.உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் ப.வாசுகி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டப உரிமையாளர் செ.திருமாறன், சிறப்பு விருந்தினராக சி.நந்தகுமார் (இராமகிருஷ்ண மிஷன், உரும்பிராய்) மற்றும் சி.நந்தகுமார் (தேசிய சேமிப்பு வங்கி), கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை சமாதான நீதவான் நித்திலா சுதாகரன் மற்றும் மாலதி யோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "நான் அரசியலுக்கு வரமாட்டேன்"

# மன்னிப்புக் கடிதம் கொடுத்த சசிகலா முதலமைச்சராக ஆசைப்படலாமா?



## பன்னீர்செல்வம் பளீர்

ஏதோ திருமண வீடுபோல இருக்கிறது தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் வீடு. திரும்பிய பக்கம் எல்லாம் கூட்டம் கூட்டமாக அ.தி.மு.க தொண்டர்கள். ஆட்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறார்கள். வீட்டின் பின்புறம் சமையல் நடக்கிறது. இடையிடையே தேநீர் வழங்கப்படுகிறது. புதுப்புது விருந்தினர்கள் வருவதைப் போல சட்டமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் வருகிறார்கள். யார் வந்தாலும் வரவேற்பு பலமாக இருக்கிறது. கூட்டத்துக்குள் பிதுங்கி வெளியில் வருகிறார் பன்னீர்.

"அம்மா வாழ்க!", "பன்னீர் வாழ்க!", "பன்னீர்செல்வம்தான் எங்கள் பொதுச் செயலாளர்", "ஓ.பி.எஸ்-தான் எங்கள் சி.எம்" என்று முழக்கங்கள் கேட்கின்றன. தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியாவின் மீடியாக்களே பன்னீர்செல்வத்தின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக்கவனித்துக் கொணடு இருக்கிறது. இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

**"ஜெயலலிதா நினைவிடத்தை நோக்கி என்ன மாதிரியான மனநிலையில் நீங்கள் சென்றீர்கள்?"**

"அம்மாவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, தியானம் செய்யவே நான் சென்றேன். ஆனால், நான் பட்ட அவமானங்கள் என்னை மீறி பல வார்த்தைகளைச் சொல்ல வைத்தன. முதலமைச்சராக பதவியேற்ற இரண்டு, மூன்று தினங்கள் கழித்து மற்றவர்களால் உருவாக்கப்பட்ட அவமானத்தை, கட்சியின் நலன் கருதி, ஆட்சியின் நலன் கருதி இதுவரை வெளிப்படுத்தாமல் இருந்தேன். கட்சிக்கோ, ஆட்சிக்கோ சின்ன பங்கம்கூட வந்துவிடக் கூடாது என்பதற்காக அதையெல்லாம் தாங்கிக்கொண்டு, ஒவ்வொரு அவமானத்தையும் பொறுமையாக சகித்துக்கொண்டு என் உள்ளேயே ஜீரணித்து முழுங்கிக்கொண்டு இருந்தேன். என்னை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து செய்யப்பட்ட அந்த நிகழ்வுகளால் வேதனையில் துடித்தேன். அந்த மனநிலையோடு தான் அம்மா நினைவிடம் சென்றேன்."

**"என்ன மாதிரியான அவமானங்கள் அவை?"**

"அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களால் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எனது பரிந்துரையில் அமைச்சர்களாக்கப்பட்டவர்கள, எனது அமைச்சரவை யில் எனக்குக் கீழ் இருந்து, என க்கு எதிராகவே பேசினார்கள். அமைச்சர் உதயகுமார், என்னை 'முதலமைச்சர் பொறுப்பில் இருந்து மாற்ற வேண்டும்' என்றார். இதுபற்றி கட்சித் தலைமைக்குச் சொன்னேன். இதெல்லாம் தவறு என்று மூத்த அமைச்சர்களிடமும் பேசினேன். அவர்கள், 'நீங்கள் தான் முதல்வர். உங்கள் மனது நோகும்படி செயற்படமாட்டோம்' என்று கூறினார்கள். அப்படிச் சொல்லிவிட்டு மதுரை சென்ற அமைச்சர் செல்லூர் ராஜூ, அங்கே எனக்கு எதிராகப் பேசுகிறார். அவரும் உதயகுமார் சொன்னதையே சொன்னார். கட்சியின் முன்னணியினர்கள் சிலர், 'பொதுச் செயலாளர் பதவி வகிப்பவர்களே, முதல்வர் பொறுப்பை ஏற்க வேண்டும்' என்று தொடர்ந்து பேசினார்கள். பதவியை இராஜினாமா செய்ய எப்போதுமே ரெடியாக இருந்த என்னை நம்பாமல், எனக்குத் தெரியாமல் சில விடயங்கள் அரங்கேறின. இதுதான் காரணம்."

**"அரசியலில் அவமானங்கள் சகஜம்தானே?"**

"முதலமைச்சருக்கே தெரியாமல், சொல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டியதை விட வேறு என்ன அவமானம்வேண்டும்? இதுசகஜமானதுஅல்ல.

மக்களுடைய நலன்களை தீர்மானிக்கக்கூடிய மிக உயர்ந்த பொறுப்புள்ள பதவியில் உட்கார வைத்துவிட்டு, என்னுடன் இருக்கின்ற சக அமைச்சர்களைவைத்து அந்தப் பதவிக்கு, அதற்குரிய கண்ணியத்துக்கு சட்டமரபுகளை எல்லாம் மீறி அவர்கள் கருத்துகள் சொல்லும் நிலைக்கு தள்ளப்பட்டது சரியா? இந்தப் பதவியை நான் விரும்பி ஏற்கவில்லை. நான் முதல்வர் பதவி வேண்டாம் என்றுதான் சொன்னேன். கட்டாயப்படுத்தி அவர்கள்தான் கொடுத்தார்கள். முதலமைச்சர்ஆக்கிஅவமானப்படுத்துவது அல்லவா இது? எப்போதும் விலகத் தயாராகத்தான் இருந்தேன். இதனை சக அமைச்சர்கள் மூலமாகச்சொல்லவைப்பதுமுறையா? தலைமைக்குக் கட்டுப்பட்டு இருக்கிறவன் என்று தெரிந்தும் இப்படி செய்துவிட்டார்களே என்பதுதான் இதற்கு அடிப்படை."

**"இதைப் பற்றி சசிகலாவிடம் சொன்னீர்களா?"**

"சசிகலாவிடம் இதைப் பற்றி நான் நேரடியாகச் சொல்லவில்லை. வேண்டியவர்களிடம் சொன்னேன. கூப்பிட்டுக் கண்டித்ததாக எனக்குத் தகவல் தந்தார்கள். கண்டித்தேன் என்று சொன்ன பிறகும்கூட அந்த அமைச்சர்கள் அதே தவறைத் திரும்பத் திரும்ப செய்து கொண்டிருந்தார்கள். அதை எண்ணும்போது அதற்கு ஊக்கம் தந்தவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாதா?"

**"சசிகலா தரப்பால் வளர்க்கப் பட்டவர்தான் பன்னீர். அம்மா விடம் அறிமுகம் செய்து வைத்ததே நாங்கள் தான் என்று அவர்கள சொல்கிறார்களே?"**

"அவர்களுக்கு வரலாறு தெரியாது! 1977 ஆம் ஆண்டில் இருந்து அ.தி.மு.கவில் இருக்கிறேன். பெரிய குளம் 18ஆவது வார்டு பிரதிநிதி, வார்டு செயலாளர் என்று எனது கட்சிப்பணி, தொடங்கியது. 1984ஆம் ஆண்டு பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட டாக்டர் சலீம் என்பவருக்கு மாற்றுவேட்பாளராக என்னைத்தான் அறிவித்து இருந்தார்கள். அந்த அளவுக்கு சிறுவனாக இருந்த என்மீது நம்பிக்கை வைத்து, சலீம் என்னை மாற்றுவேட்பாளராக மனுத்தாக்கல் செய்ய வைத்தார். பின்னர், என்னுடைய பணியைப் பாராட்டி, அம்மா என்னை பெரியகுளம் நகரச் செயலாளராக அறிவித்தார். 1996ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியை இழந்த மூன்று மாதம் கழித்து உள்ளாட்சி தேர்தல் வந்தது. தேர்தலில் நிற்க பலரும் விரும்பாத சூழ்நிலையில், நகர செயலாளர் என்ற முறையில் நானே கேட்டு பெற்று நகர்மன்ற தேர்தல் களத்தில் நின்றேன். எந்தவித நிதி ஆதாரத்தையும் மற்றவரிடம் கேட்டுப் பெறாமல், வாக்காளர்களைச் சந்தித்து, அம்மாவின் கொள்கை கோட்பாடுகளைச் சொல்லி வாக்குக் கேட்டேன். அன்று இருந்த 104 நகராட்சித் தலைவர்களுக்கான இடங்களில் 8 பேர் மட்டுமே ஜெயித்தனர். அதில் நானும் ஒருவன். அரசியலுக்கு வந்து 21 ஆண்டுகளுக்குப் பிறகு 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரியகுளம் வேட்பாளராக அம்மாவால் அறிவிக்கப்பட்ட தினகரன் சேர் அவர்கள் அங்கு களம் இறங்கினார். அதற்கு முன் தினகரன் சேரை நான் பார்த்தது கிடையாது. அவருக்கு முழு ஒத்துழைப்புடன் நகரச் செயலாளர் என்ற பொறுப் பில், அவருடன் அந்தத் தொகுதி முழுதும் சென்று பணியாற்றினேன். அவர் என்னுடைய பணிகளை எல்லாம் கூர்ந்து கவனித்து, அம்மாவிடம் சொல்லுகின்ற நிலையில் அன்று அவர் இருந்ததால், என்னைப் பற்றி அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். 2000ஆம் ஆண்டு மாவட்டச் செயலாளர் பதவியை அம்மா தந்தார்கள். 2001இல் சட்டமன்றத் தேர்தலில் பெரியகுளம் தொகுதி வேட்பாளராக அம்மா என்னை அறிவித்தார்கள். எனது தொகுதிக்கே வந்து அம்மா பிரசாரம் செய்து என்னை ஜெயிக்க வைத்தார்கள். வருவாய்த் துறை அமைச்சராக ஆனேன். மூன்று மாதங்களுக்குப் பிறகு அம்மாவுக்கு சோதனை வந்தபோது, தமிழக முதலமைச்சராக அம்மாவால் நியமனம் செய் யப்பட்டேன். இதுதான் 2001 வரை எனது வரலாறு. இதற்குப் பிறகு என்னுடைய அரசியல் பயணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். கட்சியில் இணைந்து 21 ஆண்டு களுக்குப் பிறகுதான். தினகரன் சேர் உள்ளிட்டவர்களின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஆனால், 1977ல் இருந்து அ.தி.மு.கவில் நான் இருக்கிறேன். இந்தப் பழைய வரலாறுகள் அவர்களுக்குத் தெரியாது."

**"சசிகலாவை ஏன் எதிர்க்கிறீர்கள்?"**

"நான் அரசியலில் எந்தப் பதவிக்கும் வரமாட்டேன் என்று அம்மா வுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தவர் சசிகலா. தனது குடும்பத்தினர் அம்மாவுக்குத் துரோகம் செய்து விட்டார்கள் என்பதை ஒப்புக் கொண்டு, அந்தக் குடும்பத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ள மாட்டேன் என்று எழுதிக் கொடுத்து விட்டு உள்ளே வந்தவர் சசிகலா. அவர் முதலமைச்சர் பதவிக்கு எப்படி தகுதியானவராக இருக்க முடியும்? தனது குடும்பத்தினர் துரோகம் செய்தவர்கள் தான் என்பதை சசிகலாவே ஒப்புக் கொண்டார். இத்தகைய துரோக சக்திகளிடம் ஆட்சியும் கட்சியும் போகலாமா?"

**"ஜெயலலிதா மரணத்தில் உங்களுக்கே சந்தேகம் இருக்கிறதா?"**

"நாடு முழுவதும் பொதுமக்கள் மனதில் இந்த சந்தேகம் இருக்கிறது. அதைப் போக்கும் கடமை தமிழக அரசுக்கு இருக்கிறது. என்னைக்கூட அம்மாவைப் பார்க்க விடவில்லை. எனவே, அதற்காக விசாரணை கமிஷன் அமைக்கப்படும். உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் அது நிச்சயம் அமையும்."

**"உங்களை இயக்குவது தி.மு.க. என்று சசிகலா தரப்பினர் குற்றம்சாட்டுகிறார்களே?"**

"அம்மாவின் விசுவாசி நான். அவரின் கொள்கை, கோட்பாடுகள்படிதான் நான் நடப்பேன். அவர் காட்டிய வழியைவிட்டு கடுகுமுனை அளவுகூட பிசக மாட்டேன. அ.தி.மு.க தொண்டர்களும் பொதுமக்களும் நினைப்பதைத்தான் நான் செய்வேன். என்னை யாரும் இயக்கவில்லை. இது அ.தி.மு.கவின் பிரச்சினை!"

ஜூனியர் விகடன்

# "நீ உன் வாயை மூடு" எந்த பத்திரிகையாளர் சசிகலா கேள்வி

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, நீங்க எந்த பத்திரிகையாளர் என்று பத்திரிகையாளர் ஒருவரிடம் கேட்டது தொடர்பான வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

கூவத்தூர் நட்சத்திர ஹோட்டலில் அ.தி.மு.க.சசிகலா பத்திரியாளர்களைச் சந்தித்து பேசினார். அப்போது அவர் பல்வேறு விடயங்களை தெரிவித்தார்.

இதற்கிடையில் பத்திரிகையாளர் ஒருவர் ஆளுநர் காலதாமதம் செய்வது ஏன் என கேள்வி கேட்டார். அதற்கு உடனே சசிகலா தொண்டர் ஒருவர் நீ உன் வாயை மூடு எனக் கூறியதால் அந்த இடத்தில்சற்றுநேரம்பரபரப்புஏற்பட்டது.

ஆனால் சசிகலா அந்த தொண்டரை கண்டிக்காமல் தனது பேட்டியை தொடர்ந்துள்ளார். அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர் ஒருவர் மீண்டும் ஒரு கேள்வி கேட்க அதற்கு சசிகலா நீங்க எந்த பத்திரிகையாளர் என அவரிடம கேள்வி எழுப்பினார். (இ-12)




# ஓ.பன்னீர்செல்வத்துக்கு மக்கள் ஆதரவு அதிகரிப்பு



தியானம் செய்யும் ஓ.பன்னீர்செல்வத்தை ஜெயலலிதா ஆசீர்வதிப்பது போன்ற போஸ்டர் கிரீன்வேஸ் சாலையில் ஒட்டப் பட்டுள்ளது. அதைப்பார்த்து உணர்ச்சி வசப்படும் பெண் தொண்டர்.

ஆட்சியைக் கைப்பற்ற ஓ.பன்னீர்செல்வமும், சசிகலாவும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சசிகலா வசம் 94 எம்.எல். ஏக்கள் உள்ள நிலையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கு அ.தி. மு.க மூத்த தலைவர்கள், நிர்வாகிகள், கிளைக்கழக தொண்டர்கள் என பல்வேறு தரப்பினரின் ஆதரவும் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் பொது மக்கள் மத்தியில் ஓ.பன்னீர் செல்வம், சசிகலா இருவரில் யாருக்கு அதிக ஆதரவு உள்ளது என்று பல்வேறு அமைப்புக்களின் சார்பில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு வருகிறது.

அந்தக் கருத்து கணிப்புக்களில் சசிகலாவை விட ஓ.பன்னீர்செல்வத்துக்கே அதிக ஆதரவு இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது. அ.தி.மு.க. தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் மேற்கொண்ட திட்டம் மூலம் இது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

**33 இலட்சம் பேர்**

அ.தி.மு.கவின் தொழில் நுட்பப் பிரிவில் திறமையான இளைஞர்கள் பலர் உள்ளனர். அவர்களில் பலர் ஜெயலலிதாவால் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தற்போது ஓ.பன்னீர்செல்வம் அணியில் உள்ளனர். ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு செய்பவர்கள் 92892 22028 என்ற எண்ணுக்கு மிஸ்டுகோல் கொடுக்கவும் என்று அறிவித்தனர்.

சமூக வலைத்தளங்களிலும் இதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இந்த மிஸ்டுகோல் திட்டம் அறிவிக்கப்பட்ட உடனே பொது மக்கள் மிகவும் ஆர்வத்துடன் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்து அழைப்பு செய்தனர். முதல் 48 மணி நேரத்துக்குள் 33 இலட்சம் பேர் ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரிப்பதாக மிஸ்டுகோல் கொடுத்தனர்.

இவர்களில் 2 1/2 இலட்சம் பேர் வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்கள். பல்வேறு நாடுகளில் வசிக்கும் சுமார் 1 1/2 இலட்சம் தமிழர்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளனர்.

**கோடியைத் தாண்டும்**

தொடர்ந்து அந்த இலக்கத்துக்கு அதிகமானோர் மிஸ்டுகோல் கொடுத்து வருகிறார்கள்.

எனவே விரைவில் ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரிப்பவர்கள் எண்ணிக்கை கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓ.பன்னீர்செல்வத்தின் 2 மாத ஆட்சி தமிழக மக்கள் மனதில் மிகுந்த திருப்தியையும், மகிழ்ச்சியான தாக்கத்தையும் ஏற்படுத்தி இருந்ததால் அவருக்கு ஆதரவு குவிந்துள்ளது. (இ-12)

# எம்.எல்.ஏக்கள் யாரும் வலுக்கட்டாயமாக அடைத்து வைக்கப்படவில்லை - சசிகலா

அ.தி.மு.கவைச் சேர்ந்த சசிகலா ஆதரவு எம்.எல்.ஏக்கள் யாரும் வலுக்கட்டாயமாக அடைத்து வைக்கப்படவில்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா தெரிவித்தார்.

சென்னைக்கு அருகில் உள்ள கூவத்தூரில் உள்ள ஒரு தனியார் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தனக்கு ஆதரவான எம்.எல். ஏக்களை நேற்று முன்தினம் சென்று சந்தித்த சசிகலா, பிறகு செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது, எம்.எல்.ஏக்கள் அடைத்து வைக்கப்படவில்லை என்பதையும் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் பத்திரிகையாளர்கள் தெரிந்து கொள்ளலாம் என்று கூறினார்.

மேலும், எதிர்த் தரப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் தரப்பு எம்.எல்.ஏக்களை மிரட்டுவதாகவும் குழந்தைகளை கடத்தப்போவதாக கூறுவதாகவும் சசிகலா குற்றஞ்சாட்டினார்.

எம்.எல்.ஏக்கள் தொடர்ந்து குடும்பத்தினருடன் தொலைபேசி மூலம் பேசிவருவதாகவும் கூறினார்.

சசிகலா முதல்வராகப் பதவியேற்க முடியாது என ஆளுநர் அறிக்கை அனுப்பியதாக செய்திகள் வெளியானது குறித்துக்கேட்டபோது, அது தவறான செய்தி என ஆளுநர் மாளிகை மறுத்திருப்பதைச் சுட்டிக்காட்டிய சசிகலா, தங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சிலர் திட்டமிட்டு செயற்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

தமிழக அரசியல் குழப்பத்தில் மத்திய அமைச்சர்களுக்கு பங்கு; சுவாமி புகார் அடுத்தகட்டப் போராட்டம் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, செய்தியாளர்கள் பார்த்தே தெரிந்து கொள்ளலாம் என்று கூறிய சசிகலா, வழக்குமுடிவு வெளியாகும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்புக்கு முதலில் எல்லாப் பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்படாத நிலையில், பத்திரிகையாளர்களின் எதிர்ப்புக்குப் பிறகு அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அதற்கு முன்பாக சசிகலா கூவத்தூர் சென்ற செய்தியைச் சேகரித்துக்கொண்டிருந்த செய்தியாளர்களை தனியார் விடுதிக்கு முன்பாக இருந்த சிலர் தடுத்தனர். இதையடுத்து செய்தியாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு வீதி மறியலிலும் ஈடுபட்டனர். (இ-12)

# இன்னும் பல கேள்விகள் மிச்சம் இருக்கின்றன

தமிழக அரசியலிலும் ஆட்சியிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக அப்பலோ வைத்தியசாலை வைத்தியர்கள், அரசு வைத்தயர் மற்றும் லண்டன் வைத்தியர் ரிச்சர் பீலே ஆகியோர் விளக்கமளித்திருப்பது தொடர் விவாதத்துக்கே வழிவகுக்கிறது.

செப்டெம்பர் 22 அன்று அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்தே பொதுமக்கள் மத்தியில் ஏராளமான சந்தேகங்கள் இருந்தன.

தமிழக பொறுப்பு ஆளுநர் முதல் மத்திய அமைச்சர்கள் வரை பலரும் வைத்தியசாலைக்குச் சென்று வந்தார்களே தவிர, அவரை நேரடியாகச் சந்தித்து அவரது உடல்நலம் குறித்துப் பேசியதாக ஒரு தகவலும் வரவில்லை.

வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்ட காலத்தில், ஒரு புகைப்படம் கூட வெளியிடப்படவில்லை.

தொடர்ந்து முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகள், தகவல்கள் வெளிவந்த போதிலும் "ஜெயலலிதா குணமடைந்து வருகிறார்" எனும் ஒரு வரி எல்லோரையும் அமைதிப்படுத்தி வந்தது.

ஜெயலலிதா மரணம் அடைந்தபோது அந்தச் சந்தேகங்கள் மீண்டும் தலைதூக்கின. அரசுத் தரப்பிலோ, அ.தி.மு.க. தரப்பிலோ விரிவான விளக்கங்கள் வெளிவராத நிலையில், இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் எண்ணற்ற வதந்திகள் சிறகடித்துப் பறந்தன.

இந்நிலையில், ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அ.தி. மு.கவின் பொதுச் செயலாளரான சசிகலா, முதல்வர் பதவியை நோக்கி நெருங்கும் சமயத்தில், ஜெயலலிதாவுக்குச் சிகிச்சை அளித்த வைத்தியர் குழு இதுகுறித்து செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்திருப்பதை இயல்பானதாகக் கருதிக் கடக்க முடியவில்லை.

ஒரு மாநிலத்தின் முதல்வர் திடீர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, மரணம் அடைகிறார்.

அதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள், ஊடகங்கள் கேள்வி எழுப்புகின்றன, மக்கள் பரிதவித்து நிற்கிறார்கள், 'நாங்கள் பதில் அளிக்க மாட்டோம்' என்று இறுக வாய் மூடி இருப்பது என்ன மாதிரியான ஒரு மனோபாவம்?

அந்த அளவுக்கு இதுநாள் வரை பொதுமக்களிடம் அலட்சியத்தையும் ஆணவத்தையும் வெளிப்படுத்தியவர்கள், இப்போது தானாக வலிய வந்து வைத்தியர்களுடனான செய்தியாளர்கள் சந்திப்பை நடத்துவதன் பின்னுள்ள நோக்கம் என்ன?

இப்போதும்கூட, தமிழக அரசு சார்பில் சுகாதாரத்துறை அமைச்சரோ, செயலரோ விளக்கம் அளிக்கும் இடத்தில் ஏன் அமரவில்லை? பா.ம.க. நிறுவனரும் வைத்தியருமான ராமதாஸ் இது தொடர்பில் விடுத்திருக்கும் அறிக்கை, பொதுமக்களின் பல கேள்விகளையும் சந்தேகங்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

உண்மையில், வைத்தியர்களின் பேட்டி பொதுமக்களின் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. மேலும் பல கேள்விகளையே உருவாக்கச் செய்திருக்கிறது.

இந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், ஜெயலலிதா என்ன சூழலில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்பதில் தொடங்கி, அவருக்கு என்னென்ன சிகிச்சைகள் அளிக்கப்பட்டன என்பது வரை காத்திரமான ஆதாரங்களோடும் மருத்துவ ஆவணங்களோடும் மக்களிடத்தில் அரசு விளக்கமளிப்பதே அதற்கான ஒரேவழி. அதுவே அரசின் கடமையும்கூட!

நன்றி:- ஹிந்து

# தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்த மத்திய அரசு முயற்சி

## தொல்.திருமாவளவன் குற்றச்சாட்டு

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்த மத்திய அரசு முயற்சிப்பதாக திருமாவளவன் குற்றச்சாட்டியுள்ளார்.

பெரம்பலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி கொடியேற்று விழா மற்றும் கல்வெட்டு திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்துகொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் நிருபர்களிடம் கூறியதாவது,


முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இராஜினாமா செய்து ஒரு வார காலம் ஆகிறது. அ.தி.மு.கவில் புதிய சட்டமன்ற தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஒரு வார காலமும் தமிழகம் பதற்றத்துடன் உள்ளது. தமிழக ஆளுநர் எந்த வழிகாட்டலும் இதுவரை வழங்கப்படாமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது. தற்போதைய நிலையை ஆளுநர் சீர்செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பிறகு பல்வேறு திருப்பங்கள் நிகழ்ந்து வருகின்ற நிலையில், ஆளுநர் தமிழகத்திலிருந்து ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றாமல் உள்ளார்.

இதுவரை ஆளுநர் என்ன முடிவெடுத்துள்ளார் என்பது மக்களுக்கு தெரியவில்லை. இது திட்டமிட்டு நடக்கிறதா? அல்லது நடைமுறையில் உள்ள தேக்கமா? இதை தெளிவுப்படுத்தவேண்டிய பொறுப்பு மத்திய அரசு அல்லது ஆளுநருக்கு உள்ளது.

இதனால் ஒவ்வொரு தரப்பினரும் தங்களுக்கு வேண்டிய ஆதரவாளர்களை திரட்டுவதிலும், தக்க வைப்பதிலும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இதனால் குதிரை பேரம் என்று சொல்லக்கூடிய வகையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு விலைபேசப்படுகிறது என்று பொதுவெளியில் விவாதிக்கப்படுகிறது. இந்த அவலம் ஏற்படுவதற்கு ஆளுநர் விரைந்து முடிவெடுக்காதது தான் காரணம்.



ஜெயலலிதா இறப்பின் போது உடனடியாக புதிய ஆட்சி அமைத்தது அதிர்ச்சியளிக்கிறது. ஒரு நிமிடம் கூட முதல்வர் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதில் வேகம் காட்டினார்.

ஆனால் இப்போது பிரச்சினை எழுகின்றபோது ஆளுநர் தமிழகத்தை விட்டு வெளியே சென்றது ஏன்? முதல்வர் பன்னீர்செல்வம் இராஜினாமா செய்து 5 நாட்கள் கழித்து தான் ஆளுநர் வந்தார். வந்த பின்பும் இதுவரை முடிவெடுக்காதது ஏன்? மத்திய அரசு இதில் எந்த வகையில் தலையிடுகிறது என்பதை அனைவரும் உற்று நோக்கிக் கொண்டுள்ளனர்.

இது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க வழிவகுக்கும். எனவே குதிரை பேரம் என்ற அவலம் ஏற்படாமல் இருக்க ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டும். சட்டசபை கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும், இதில் யாருக்கு பெரும்பான்மை இருக்கிறதோ அவர்களை அழைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-12)

# சொகுசு விடுதியில் 94 எம்.எல்.ஏக்கள்

## வருவாய்த் துறையினர் தகவல்

(சென்னை)

கூவத்தூர் தனியார் சொகுசு விடுதியில் வருவாய்த்துறையினர் மேற்கொண்ட விசாரணையில் 94 எம்.எல்.ஏக்கள் மட்டுமே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்தது.

இதில் ஏனைய எம்.எல்.ஏக்களின் நிலை என்ன? அவர்கள் எங்கே தங்க வைக்கப்பட்டுள்ளனர் போன்ற விபரங்கள் தெரியாததால், அ.தி.மு.க. வட்டாரத்தில் அடுத்தகட்ட பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சசிகலாவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை காஞ்சிபுரம் மாவட்டம் கல்பாக்கத்தை அடுத்த கூவத்தூர் பகுதியில் உள்ள தனியார் சொகுசு விடுதியில் கடந்த நான்கு நாட்களாக தங்க வைத்துள்ளனர்.

இந்நிலையில், எம்.எல்.ஏக்களைக் காணவில்லை என நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், எம்.எல்.ஏகளிடம் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டது. இதையடுத்து, கூவத்தூரில் தங்கியுள்ள எம்.எல்.ஏக்களிடம் விசாரணை நடத்துவதற்காக செய்யூர் வட்டாட்சியர் ராமச்சந்திரன் தலைமையிலான வருவாய்த்துறை குழுவினர் மற்றும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை 6:30 மணிக்கு கூவத்தூர் சொகுசு விடுதிக்குச் சென்றனர்.

சுமார் 5 மணி நேரமாக நடித்த விசாரணையில் விடுதியில் தங்கியுள்ள எம்.எல்.ஏக்களிடம் தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், விசாரணை முடித்த வருவாய்த்துறையினர் பிற்பகல் 12 மணியளவில் விடுதியில் இருந்து வெளியேறினர். அப்போது, செய்தியாளர்கள் அவர்களை சந்திக்க முயன்றனர்.

ஆனால் பொலிஸார் அவர்களை சந்திக்கவிடாமல் தடுத்தனர். இதில் பொலிஸாருக்கும் செய்தியாளர்களுக்கும் இடையே கடும் தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதையடுத்து வருவாய்த்துறையினர் வாகனத்தில் விரைந்து புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

இந்நிலையில் கூவத்தூர் தனியார் விடுதியில் 94 எம்.எல்.ஏக்கள் மட்டுமே தங்கவைக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளதால், மற்ற எம்.எல்.ஏக்களின் நிலை என்ன என்ற விபரங்கள் தெரியாததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

செய்தியாளர்களை சந்தித்த சசிகலா ஆதரவு எம்.எல்.ஏக்கள் சிலர், விடுதியில் 128 எம்.எல்.ஏக்கள் தங்கியுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில், வருவாயத் துறையினர் 94 எம்.எல்.ஏக்கள் மட்டுமே இருப்பதாக தெரிவித்துள்ளதால், மீதமுள்ள 34 எம்.எல்.ஏக்கள், முதல்வர் பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனரா? என்கிற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

எம்.எல்.ஏக்களிடம் விசாரணை நடத்தியது தொடர்பாக, செய்யூர் வட்டாட்சியர் ராமச்சந்திரன் கூறியதாவது,

நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏக்களிடம் தனித்தனியாக வைத்து விசாரித்தோம். இதில், 94 எம்.எல்.ஏக்களிடம அறிக்கை பெற்றுள்ளோம்.

இந்த அறிக்கை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றார்.

இதுகுறித்து, காஞ்சிபுரம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறியதாவது,

நீதிமன்ற உத்தரவின் பேரில் வருவாய்த்துறையினர் விடுதியில் தங்கியுள்ள எம்.எல்.ஏக்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# அ.தி.மு.க. விவகாரத்தில் பா.ஜ.க. தலையிடுவது சரியல்ல-காங்கிரஸ்

(மதுரை)

தமிழகத்தில் அடித்தளம் இல்லாத நிலையில் அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் பா.ஜ.க. தலையிடுவது சரியல்ல என்று காங்கிரஸ் மாநில தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

விருதுநகரில் காங்கிரஸ் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொள்வதற்காக தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் மதுரை வந்தார். அப்போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

தமிழகத்தில் அடித்தளம் இல்லாத நிலையில் ஆட்சியிலும், அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்திலும் பா.ஜ.க. தலையிடுவது சரியல்ல. அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் காங்கிரஸ் தலையிடாது. அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் மற்றும் முதலமைச்சரை அக்கட்சியின் எம்.எல்.ஏக்களே முடிவு செய்ய வேண்டும். இதில் பெரும்பான்மை உள்ள வரை ஆட்சி அமைக்க அனுமதித்து விட்டு பின்னர் சட்டப் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க அவகாசம் அளிக்க ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.

வட மாநிலங்கள் சிலவற்றில் மத்திய அரசு ஆட்சியை கலைத்தது. பின்னர் நீதிமன்ற தலையீட்டால் மீண்டும் அந்த ஆட்சிகள் அமைக்கப்பட்டன. எனவே அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அ.தி.மு.க. ஆட்சி தொடர ஆளுநர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் அசாதாரணமான சூழ்நிலை நிலவுகிறது. தமிழகத்தில் கடும் வரட்சி, விவசாயிகள் தற்கொலை என பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அதனால் நிலையான அரசை அமர வைக்க ஆளுநர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காலம் தாழ்த்துவதால் குதிரைப் பேரமும், சட்டம்-ஒழுங்கு பிரச்சினையும் ஏற்படும் வாய்ப்பு உருவாகிவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஆளுநர் முடிவு எடுக்கத் தாமதிப்பது சட்டவிரோதம் அல்ல - சட்ட நிபுணர்

தமிழ்நாட்டில் யார் ஆட்சி அமைப்பது? என்பது பற்றி முடிவு எடுக்க ஆளுநர் கால தாமதப்படுத்துவது சட்டவிரோதம் அல்ல என்று சட்ட நிபுணர் சோலி சொராப்ஜி கருத்து தெரிவித்தார்.

முன்னாள் அட்டார்னி ஜெனரலும் சட்ட நிபுணருமான சோலி சொராப்ஜி டில்லியில் அளித்த சிறப்புப்பேட்டியில்,

தமிழ்நாட்டில் தற்போது யார் ஆட்சி அமைப்பது என்பது குறித்த முடிவை எடுப்பதை ஆளுநர் கால தாமதப்படுத்துவது சட்டவிரோதம் என்று சொல்ல முடியாது. அது சட்டவிரோதம் ஆகாது. சசிகலாவின் கோரிக்கையை ஆளுநர் நிராகரிக்கவில்லை. அவர் முடிவு எடுப்பதில்தான் தாமதம் ஏற்படுகிறது.

நிராகரிக்காத பட்சத்தில் அது சட்டவிரோதம் ஆகாது. சசிகலாவுக்கு எதிரான வழக்கின் மீதான தீர்ப்பு இன்னும் நிலுவையில் இருக்கிறது. அந்தத் தீர்ப்பு வரும்வரையில் காத்திருப்பது எந்த வகையிலும் தவறில்லை.

தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் நேற்று முன்தினம் இது குறித்து என்னிடம் ஆலோசித்தார்.

சாதாரணமாக ஆளுநர் மாநில அமைச்சரவை ஆலோசனைப்படியும் அங்கு என்ன கோரிக்கை வைக்கப்படுகிறதோ அதனையும் நிறைவேற்றுவார்.

சசிகலா மீது வழக்கு நிலுவையிலுள்ளது. மேல் முறையீட்டு மனுவின் மீதான தீர்ப்பு உச்சநீதிமன்றில் உள்ளது.

நீதிமன்றத்தால் சசிகலா மீது மிகவும் கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தண்டனையும் விதிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் அதனை நிராகரித்தது. ஆனால் மேல் முறையீட்டு வழக்கு, உச்ச நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. அவர் மீது உச்ச நீதிமன்றில் குற்றம் சுமத்தினால் நிலைமை என்னவாகும்? இப்போது அவர் பதவி ஏற்றுக்கொண்டால் அப்படி ஒரு நிலைமை உருவாகும் போது அவர் பதவிவிலக வேண்டும்.

எனவே, இதுபோன்ற விசித்திரமான சூழ்நிலையில் ஆளுநர் ஆழமாக சிந்தித்திருப்பார். அதன் விளைவாக சற்றுத் தாமதப்படுத்தலாம்.

உச்ச நீதிமன்று ஓரிரு நாட்களில் தீர்ப்பை வெளியிடாமல் ஒரு வாரத்துக்கும் மேல் தாமதப்படுத்தினால் அப்போது ஆளுநர் வேறு மாதிரி முடிவு எடுக்கலாம். தற்போது அவர் சசிகலாவின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. ஒத்திப்போட்டிருக்கிறார். இது தவறானது அல்ல.

உச்ச நீதிமன்றுக்கு இது எத்தனை முக்கியமான வழக்கு என்று தெரியும். நாளை புதன்கிழமை அல்லது நாளை மறுதினம் வியாழக்கிழமை தீர்ப்பு வரலாம் என்று எதிர்பார்க்கிறோம் என சோலி சொராப்ஜி மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஏன் எமக்கும் மாணவர்களுக்கும் யோகா பயிற்சி தேவை

யோகியும் நம் காலத்தின் ஆழ்ந்த மெய்யறிவாளருமான சத்குரு அவர்கள் தொலைநோக்குடைய மனிதநேயரும் முதன்மையான ஆன்மீகத்தலைவரும் ஆவார். உள்ளார்ந்த அனுபவம் மற்றும் ஞானம் இவற்றில் ஊன்றி நிற்பது போல சாதாரண அன்றாட வாழ்வுசார் விடயங்களிலும் ஈடுபாடு உடையவரான சத்குரு, அனைத்து மக்களதுமான உடல், மன, ஆன்மீக நலத்துக்காக இடையறாது உழைப்பவர். சுயம் பற்றியதான ஆழ்ந்த ஞானத்திலிருந்து அவர் அடைந்த வாழ்வியல் இயங்கு முறைகள் குறித்த அறிவு, வாழ்வின் நுட்பமான பரிமாணங்களை ஆய்வதில் அவருக்கு வழிகாட்டுவதாயுள்ளது.

**யோகா பயிற்சி என்றால் என்ன?**

யோகா பயிற்சி ஆதியோகி சிவபெருமானால் சப்தரிஷிகள் மூலம் மனிதயினம் திறம்பட நோயற்று வாழ கொடுக்கப்பட்ட மகத்தான கருவி. எந்த மதத்தவர்களும் பயிலலாம்.

வாழ்க்கையில் நடக்கும் என்ன அனுபவமும் ஒரு இரசாயன மாற்றத்தை சார்ந்தது. ஒருவர் சந்தோசமாகயிருக்கும் போது எண்டோபின் (Endorphin) என்னும் சுரப்பி சுரப்பதாக விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள். அதே போன்று ஒருவர் கவலையாக இருக்கும் போது இன்னொரு வகையான சுரப்பி சுரக்கின்றது. இந்தச் சுரப்பிகள் எமது மூளையிலும் உடம்பிலும் மாற்றங்களை உண்டாக்கி எமது உணர்ச்சிகளை மாற்றுகின்றன. யோகா பயிற்சி மூளையிலும் உடம்பிலும் நல்லவையான சுரப்பிகளை சுரக்கச் செய்து எம்மை நோயற்று சந்தோசமாக வாழச்செய்யும்.

**யோகா பயிற்சி மாணவர்களுக்கு தேவையா ?**

ஒவ்வொரு பிள்ளைகளும் தனித்தன்மையானவர்கள். அவர்களின் கெட்டித்தனத்துக்கு பல காரணங்கள் உண்டு. ஒரு மாணவனின் கெட்டித்தனம் ஒரு விடயத்தை கிரகிக்கும் தன்மையிலும் அதில் ஒரு தெளிவான விளக்கத்திலும் தங்கியுள்ளது. யோகா பயிற்சி ஒரு மாணவனின் கெட்டித்தனத்தை கூட்டுவதுடன் நோயற்று நல்ல ஒழுக்கத்துடன் வாழ உதவி செய்யும்.

மாணவர்கள் தனிப்போதனை வகுப்புகளுக்கும் செல்வதனால் யோகா பயிற்சி செய்ய நேரம் இல்லாது இருக்கின்றார்கள். ஒரு முப்பது நிமிடம் யோகா பயிற்சி செய்வதனால் படிப்பில் அவர்களின் கிரகிக்கும் தன்மை கூடுவதுடன் மனதில் தெளிவும் உண்டாவதனால் அவர்கள் படிக்க வேண்டிய நேரம் குறைவாக இருக்கும்.

பெற்றோர்கள் ஆசிரியர்கள் நமது பிள்ளைகளை யோகா பயிற்சியில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டுமென தாழ்மையாக வேண்டுகின்றேன்.

**யாருக்கு யோகா பயிற்சி தேவை?**

யோகா பயிற்சி என்றால் தலை கீழாக நிற்பதும் அல்லது உடம்பால் முடிச்சு போடுவதும் என்றே பலர் எண்ணுகின்றார்கள். ஆதியோகி சிவபெருமானால் வடிவமைக்கப்பட்டது. எல்லோரும் பிறப்பில் இருந்து விடுதலையை நோக்கிச் சென்று முத்தியடைய வேணடும் என்பதற்காகவே. அத்துடன் நோயற்று சந்தோசமாக வாழலாம். என்ன நோயுள்ளவர்களும் எந்த வயதானவர்களும் யோகாசன பயிற்சி செய்யலாம். இதனால் நோய்கள் குறையலாம் அல்லது துப்புரவாக மாறலாம்.

யோகாசன பயிற்சி உங்களில் பல நல்ல மாற்றங்களை கொண்டு வருவதனால் அதை ஒழுங்காக ஒரு பயின்ற ஆசிரியரிடம் இருநது கற்க வேண்டும்.

தொலைக்காட்சியை அல்லது ஒருபுத்தகத்தை பார்த்து கற்று பல பேர் கூடாத விளைவுகளை எதிர் நோக்கியுள்ளார்கள்.

நான் உங்களுக்கு ஒரு கதை கூறவிரும்புகின்றேன்.

நான் தொடக்கத்தில் விவசாயம் செய்தேன். ஒரு கிணறு தோண்ட தொடங்கிணேன். ஐம்பது அடிகளில் தண்ணீர் வரவில்லை, நூறடியிலும் தண்ணீர் வரவில்லை. எனவே சிலபேர் இந்த இடத்தில் தண்ணீர் வராது வேறிடத்தில் தோண்டச் சொல்லி கூறினார்கள். ஆனால் நான் தொடர்ந்தும் அதேயிடத்தில் தோண்டி 150 அடியில் தண்ணீரைக் கண்டேன். நான் மற்றவர்கள் கூறியதை கேட்டு வேறிடத்தில் தோண்டியிருந்தால் பல குழிகள் தான் மிஞ்சியிருக்கும். தண்ணீரைக் கண்டிருக்க முடியாது. எனவே நீங்கள் ஏதாவதொரு ஆன்மீக வழியில் இருப்பீர்களானால் தொடர்ந்து அதிலேயே தீவிரமாக, ஆழமாக ஈடுபட்டு பலனை அடைய வேண்டுமெனறு தாழ்மையாக வேணடுகின்றேன்.

மேலும் எனது உரையை தமிழில் ஆன்மீகத்தை பற்றிய விஞ்ஞான பூர்வ மான விடயங்களை இந்த இணையத்தளத்தில் பார்க்கலாம்.

http://tamilblog.ishafoundation.org/athanaikum-asaipadu/

http://www.ishafoundation.org/ta/Isha-Foundation/overview.isa

நான் வைத்திய கலாநிதி கௌரிபாலன். யாழ்ப்பாண வைத்தியசாலையில் 1984 தொடங்கி 1989 வரை குழந்தைப்பேறும் மகளிர் மருத்துவ துறையில் கடமையாற்றியுள்ளேன். சில காலம் இங்கிலாந்தில் கடமையாற்றி திரும்பி வந்துள்ளேன். நான் கடந்த எட்டு வருடங்களாக ஈசா யோகா சற்குரு அவர்களின் மேற்பார்வையின் கீழ் பயின்று வருகின்றேன். மார்கழி மாதம் 2013 ஆம் ஆண்டு 21 கிழமைகள் வெள்ளையங்கிரி மலையடிவாரத்தில் உள்ள ஈசா ஆச்சிரமத்தில் அதிதீவிர பயிற்சியின் பின் தொன்மை வாய்ந்த ஹர்த்தா யோகா ஆசிரியராக பயின்றுள்ளேன்.



நான் 2013 ஆம்ஆண்டு மார்கழி, 2014ஆம் ஆண்டு வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் யோகாசன வகுப்புகளை இனாமாக நெல்லியடி, பருத்தித்துறை, சின்மயாமிஷன் நல்லூர், மானிப்பாய், உடுப்பிட்டி, கொழும்பு ஆகிய இடங்களில் நடத்தினேன். நெல்லியடியில் ஐந்து பாடசாலைகளில் யோகாசன வகுப்புக்களை கற்பித்தேன். ஆனால் மாணவர்களுக்கும் ஆசியர்களுக்கும் நேரம் இல்லாததனால் ஒரு சிறு தொகையானவர்களே பயின்றார்கள்.

சற்குரு ஒருமுறை கூறினார் ஒரு வீதமானவர்கள் ஒரு பாடசாலையில் யோகாசனம் செய்தால் ஒரு பெரிய நல்ல மாற்றத்தை காணலாம் என்று.

யோகாசனத்தை நான்கு மணித்தியாலத்தில் பயிலலாம். பின்பு ஒவ்வொரு நாளும் முப்பது நிமிடங்கள் யோகாசனத்தை செய்தால் நோயற்று சந்தோசமாக வாழலாம். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு யோகாசனத்தை கற்க உதவி செய்ய வேண்டு மென்று தாழ்மையாக வேண்டுகின்றேன்.

**வகுப்புகள்**

இலவச யோகாசனப் பயிற்சியும் தியானமும் எல்லோருக்கும் என்ன நோயுள்ளவர்களும், எந்த வயதானவர்களும், எந்த மதத்தவர்களும் யோகாசன பயிற்சி செய்யலாம். இதனால் நோய்கள் குறையலாம் அல்லது துப்பரவாக மாறலாம். திறம்பட நோயற்று வாழலாம்.

1.இடம்:

சிவகுருநாத பீடம்,குமார சுவாமி வீதி,கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

உபயோகா, ஈசாகிரியா-தியானம்

காலம்: 1. 18.02.2017 & 19.02.2017

2. 25.02.2017 & 26.02.2017

3. 04.03.2017 & 05.03.2017

தொடர்பு, பதிவு: வைத்திய கலாநிதி கௌரிபாலன் 071 924 7919

2. இடம்:

மகேஸ்வரன் மணிமண்டபம், நல்லூர் கந்தசாமி கோவில்,வடக்குவீதி.

மூச்சுப்பயிற்சி- நாடிச் சுத்தி, ஓம்காரம், ஈசாகிரியா-தியானம்

17.02.2017 காலை 6.15-7.00, 7.00-7.45 7.45-8.30 , 8.30-9.15

24.02.2017 காலை 6.15-7.00, 7.00-7.45, 7.45-8.30, 8.30-9.15

03.03.2017. காலை 6.15-7.00, 7.00-7.45, 7.45-8.30, 8.30-9.15

தொடர்பு, பதிவு: வைத்திய கலாநிதி கௌரிபாலன் 071 924 7919

குறிப்பு:- 1.இலேசான உணவை 2 மணித்தியாலங்கள் முன் உண்ணவும்.

2. தளர்வான உடை பயிற்சிக்கு நன்று.

பெண்களுக்கு மூடிய கழுத்துச் சட்டை அவசியம்.

3. அமர்ந்து இருக்க துவாய் அல்லது துணி தேவை.

சிறு தலையணையும் உதவியாக இருக்கும்.

skype மூலமாக யோகாசனப் பயிற்சி பயில வாய்ப்புண்டு.

**வைத்திய கலாநிதி கௌரிபாலன்**

# 2017 -ம் ஆண்டில் இதுவரை 9,886 பேருக்கு டெங்கு 12 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்தாண்டில் இதுவரையான காலப்பகுதியில் 9886 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 12 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 9886 பேர டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 12 பேர் குறித்த நோயினால் மரணித்துள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் தொகையானது கடந்த வருடத்தின் முற்பகுதியில் கண்டறியப்பட்ட நோயாளர்களை காட்டிலும் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடத்தில் ஜனவரி மாத இறுதியில் 6694 பேரே டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டிருந்தனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தில் 2776 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 1102 பேரும் காலி மாவட்டத்தில் 772 பேரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 553 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியிலான டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கொழும்பில்மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது டெங்கு தொற்று பரவக்கூடிய 102 பாடசாலைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதன்போது குறித்த பாடசாலைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தொடர்ந்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் டெங்கு பரவும் அபாயத்துடன் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

மேலும் மக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழலில் டெங்கு பரவும் காரணிகளை அகற்றி சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ந்தும் காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது. (இ-7)

# இலங்கைக்கு இஸ்ரேலின் கட்டட நிபுணர்

பாலஸ்தீனத்தில் தனியார் காணிகளில் இஸ்ரேலின் இரகசிய தங்குமிட வீடுகளை அமைக்கும் திட்டத்துடன் தொடர்புடைய இஸ்ரேலின் பிரபல கட்டட நிபுணர் மொஷே சாப்டி இலங்கை வரவுள்ளார்.

அவர், எதிர்வரும் வாரத்தில் இலங்கையின் கட்டட நிபுணர் சம்மேளன பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

எனினும் பாலஸ்தீன மக்களின் பிரச்சினையுடன் தொடர்புடையவர் என்ற வகையில் அவரின் இலங்கை வருகை தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன சுதந்திர நாட்டுக்கு ஆதரவு தரும் இலங்கை அவரை அழைத்தமை தொடர்பில் குறித்த ஊடகம் விமர்சனம் வெளியிட்டுள்ளது. (இ-7)

# நாட்டு மக்களுக்கு நல்லாட்சி அரசால் வாழ்க்கைச் சுமை நாளாந்தம் அதிகரிப்பு

## மகிந்த ராஜபக்ஷ கடும் விசனம்



(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல், நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமை நாளுக்கு நாள் அதிகரித்தே செல்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தங்கல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

இன்று மக்களின் வாழ்வதற்கான உரிமை தடைப்பட்டுள்ளது. அரசாங்கம் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை தீர்மானித்துள்ளது. இருப்பினும், அந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு சந்தையில் பெற்றுக்கொள்ளமுடியாதநிலைமை காணப்படுகின்றது. இன்று சந்தையில் அரிசி ஒரு கிலோ 100 ரூபாவையும் தாண்டியுள்ளது.

மத்தல விமான நிலையத்தை நெல் களஞ்சியசாலையாக மாற்றுவதாக கூறிய அரசாங்கத்துக்கு என்ன நடந்தது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் மக்களுக்கு வழங்கிய நலன்கள் என்ன? உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தள்ளிப் போட்டு வருகின்றது.

தேர்தலை நடத்தினால் தோல்வியைச் சந்திக்க வேண்டி வரும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். நாட்டின் அனைத்து இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள்.

இந்த நாட்டின் நிர்வாகம் குழப்பம் நிறைந்ததாக மாறியுள்ளது. நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. நாளுக்கு நாள் தேர்தலை பிற்போட்டு வருகின்றனர். அரசாங்கம் இதனைத் தான் மக்களுக்காக செய்து வருகின்றது. இன்று அல்லது நாளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர். இவ்வளவுதான் எனவும் மகிந்த மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீதித்துறை சார் நடைமுறை என்ன?

(கொழும்பு)

சட்டத்தரணி ராமநாதன் கண்ணன் என்பவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த நியமனத்தை வழங்குவதற்கு நீதித்துறை சார்ந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா? என்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டுமென, இலங்கை மனித உரிமை மையம் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கோரியுள்ளார்.

பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடமே தெளிவுபடுத்துமாறு கோரியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சட்டத்தரணி ராமநாதன் கண்ணன் என்பவரை, மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்குமாறு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எழுத்துமூலமாகக் கோரியதாகவும் அதற்கே சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் கபே அமைப்பு மேற்கொண்ட ஆரம்பகட்ட அவதானிப்புகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த நியமனத்துக்கு நீதிச் சேவைகள் ஆணைக் குழுவும் இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும், இந்த நியமனத்துக்கு பிரதம நீதியரசரின் அனுமதி அல்லது பரிந்துரைகள் கட்டாயமாக தேவைப்படுகின்றது.

அரசியலமைப்பின் 111(2) (அ) பிரிவின் பிரகாரம், மேல் நீதிமன்றத்துக்கு நீதிபதியொருவரை நியமிப்பதற்கு, சட்டமா அதிபரைக் கேட்டதன் பின்னர் நீதிச்சேவைகள் ஆணைக்குவினால் வழங்கப்படும் பரிந்துரைகள் ஜனாதிபதியினால் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

தன்னுடைய கண்காணிப்பின் கீழான நடைமுறைகளின் பிரகாரம் இவை செயற்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்ட விவகாரம் 25 சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை முதலீட்டு வலய திறப்பு நிகழ்வின் போது, கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 25 சந்தேக நபர்களின் விளக்கமறியல், 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை அம்பாந்தோட்டை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியபோது, நீதவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவை பிறப்பித்தார். (இ-7)



# துமிந்தவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மரணதண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மூத்தவர்கள்– இளையவர்கள்

குடும்பத்தில் அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள் இடையே நல்லுறவு அவசியம்.

இதில் மூத்தவர்களுக்குத்தான் அதிக பங்கு இருக்கிறது. குடும்பத்தில் மூத்தவர்கள் சில அடிப்படைத் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். முதல் தகுதியாக பெற்றோருக்கு அடுத்தபடியான பாச உணர்வு அவர்களுக்கு இளையவர்கள் மீது இருக்க வேண்டும். அதுவும் பெற்றோர் இல்லாத பட்சத்தில் ஒரு மடங்கு கூடுதலான அன்பை அவர்கள் இளையவர்கள் மீது செலுத்த வேண்டியது அவசியம். தவறுதலாக இளையவர்கள் நடந்து கொண்டால்கூட அதை மன்னித்து ஏற்றுக்கொண்டு அரவணைத்துச் செல்லும் மனப்பக்குவம் வேண்டும்.

தம்பியாக இருக்கட்டும், தங்கையாக இருக்கட்டும் அவர்கள் வீட்டு விசேஷம் என்றாலும் சரி, அவர்களுக்கே திருமணம் என்றாலும் சரி, நமக்கென்ன என்று இராமல் எதையும் முன்னின்று நடத்த வேண்டும்.

குழப்பம் என்றாலும், பிரச்சினை என்றாலும் அதில் தலையிட்டு அதை தீர்த்து வைக்க வேண்டும்.

தன் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டியவர்கள் என்ற ஒரே நினைப்பில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விடக் கூடாது. என்னை விட வயதில் நீ இளமை என்றாலும் நீ சொன்னது மிகச் சரி. அப்படியே செய்வோம் என்று அவர்களுடைய கருத்தையும் ஏற்கக்கூடிய மனோநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதி நிர்வாகம் கையில் இருக்கிறது என்பதற்காகக் கூடப் பிறந்தவர்களைக் கலக்காமல் தான் தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்து, பின்னால் அது தோல்வியடையும் போது கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகக்கூடாது. இத்தகைய ஒரு செயல் எந்த ஒரு மூத்தவரையும் மூலையில் தள்ளி செல்வாக்கு இல்லாதவராகச் செய்து விடும்.

தன்னுடன் கூட பிறந்தவர்களிடத்தில் கருத்து வேறுபாடுகள் எழும் போது, அவற்றை உடனே சரி செய்ய வேண்டும். மாறாக அவர்களுடைய பூசல்களைப் பெரிதுபடுத்தி விடக்கூடாது.

குடும்பத்தில் மூத்தவர்கள் உள்ளங்களை இணைத்து வைக்கப் பாடுபட வேண்டுமே தவிர, ஒருபோதும் உறவுக்கு வேட்டு வைக்கும் வேலையில் இறங்கக்கூடாது. இது ஒரு தலையாய பண்பு.

மூத்தவராக பிறந்த ஒரே பாவத்திற்காக(?) எதையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.


இப்படி நடந்து கொள்ளாமல் என்னை யாரும் மதிப்பில்லை என்று புலம்புவதில் அர்த்தமில்லை.

இளையவர்களின் பணியோ மிக எளிது. உடன் பிறந்த மூத்தவர்களுக்கு மரியாதை கலந்த பாசத்தைச் செலுத்தினால் போதும். அவர்களது சொல்லுக்குக் கட்டுப்படவும் வேண்டும்.

இவற்றையெல்லாம் உணராத மூத்தவர்கள் மற்றும் இளையவர்களைக் கொண்ட குடும்பம் உருப்பட்ட மாதிரித்தான்.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கைக்கு எதிராக புலம்பெயர் அமைப்புகள்



ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கைக்கு எதிராக ஆதரவுகளைத் திரட்டும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்படும் நிலையில் இலங்கை இதற்கு மேலும் கால அவகாசம் கோரும் போது அதற்கு மனித உரிமைகள் பேரவை ஆதரவு வழங்குவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் சில புலம்பெயர் அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரானது இம்மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகளுக்கான தமிழ் மையம் உட்பட பல்வேறு புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஜெனிவாவிலுள்ள இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக மனித உரிமைகளுக்கான தமிழ் மையத்தின் பொதுச் செயலர் எஸ்.வி.கிருபாகரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றுவார். இவர் தனது உரையில் அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக உரையாற்றுவார் எனக் கூறப்படுகிறது.

பெப்ரவரி 28 செவ்வாய்க்கிழமை, மங்கள சமரவீர ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றவுள்ளார். அத்துடன் இந்த அமைப்பின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த சில வெளியுறவு அமைச்சர்களுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதுமட்டுமல்லாது இலங்கை தனக்குச் சார்பான பிறிதொரு தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றுவதற்கான ஆதரவையும் திரட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான பொறிமுறைகளை அமுல்படுத்துவதற்கான காலஅவகாசம் இலங்கை அரசாங்கத்திற்கு தேவை என்பதை ஆதரிக்கும் முகமாகவே இத்தீர்மானம் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 34 ஆவது கூட்டத் தொடர் இடம்பெறும் காலப்பகுதியில் அதாவது மார்ச் 22 அன்று இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறும்.

இவ்விவாதமானது கடந்த ஆண்டு ஐ.நா.மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹூசேனால் இலங்கையின் மனித உரிமை நிலைப்பாடு தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறும்.

சிறுபான்மை விவகாரங்கள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் மற்றும் சித்திரவதை மற்றும்ஏனைய சித்திரவதை தொடர்பான சிறப்பு அறிக்கையாளராலும் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளரான யுவன் ஈ.மெண்டெஸ் இலங்கை தொடர்பான தனது அறிக்கையை ஏற்கனவே வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சித்திரவதைகளைவிட தற்போது இடம்பெறும் சித்திரவதைகளின் அளவானது குறைவாகக் காணப்பட்டாலும் அத்துடன் சித்திரவதை முறைமைகள் மாறினாலும் 'சித்திரவதைக் கலாசாரம்' என்பது தற்போதும் தொடர்கிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மற்றும் குற்றவியல் திணைக்களமானது விசாரணைகளின் போது சந்தேகநபர்களுக்கு எதிராக உடல் மற்றும் உள ரீதியான சித்திரவதைகளை மேற்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கப்படுவதாகக் காரணம் காட்டி கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்படும் போதும் விசாரணையின் போதும் உடல் மற்றும் உள ரீதியான சித்திரவதைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளனர். ஆனால இவர்களைக் கைதுசெய்யும் இலங்கை அரச திணைக்களங்கள் தமது நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது எனத் தொடர்புபடுத்துகின்றனர்" என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறப்பு அறிக்கையாளரான மெண்டெஸ் கடந்த ஆண்டு இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார். தனது பயணத்தின் போது சந்தேகநபர்கள் குறிப்பாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதுடன் சில வார அல்லது நாட்களாக இவர்கள் விசாரணை செய்யப்படும் போது இவர்கள் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படுவதில்லை என்பதற்கான சான்றுகளை மெண்டெஸ் பெற்றுக்கொண்டார். இவ்வாறு தடுத்து வைக்கப்படும் காலத்தில் சித்திரவதைகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

நல்லிணக்கப் பொறிமுறைகள் மீதான ஆலோசனைச் செயலணியும் இலங்கை மீதான ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் விவாதத்தின் போது அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடு அமுல்படுத்தப்படும் போது வெளிநாட்டு நீதிபதிகள் உட்பட அனைத்துலகப் பிரசன்னத்துடன் கூடிய பொறிமுறை பின்பற்றப்பட வேண்டும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கமானது வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படுவதை விரும்பவில்லை.

இந்த அறிக்கையானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்ட போதிலும் நிலைமாறு நீதிப் பொறிமுறையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

'இந்த அறிக்கை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன் இலங்கையில் நிலைமாறு கால நீதியை மதிப்பதற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பாகவும் விவாதிக்கப்படுகிறது' என நல்லிணக்கப் பொறிமுறைகள் மீதான ஆலோசனைச் செயலணி தெரிவித்துள்ளது.

இலங்கை மீதான அழுத்தத்தைத் தொடர்ந்தும் பேணுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்துவதற்காக வடமாகாண சபை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் ஜெனிவாவிற்குப் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.




ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்துலக நீதிப் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் வடமாகாண சபையானது சொந்தமாக சுயாதீன போர்க்குற்றவியல் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கு சட்ட ரீதியான சாதகத் தன்மையைக் கண்டறியும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

பொறுப்புக்கூறல் தொடர்பாக கடந்த ஆண்டில் கொடுக்கப்பட்ட கால அவகாசத்தை இலங்கை தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக மனித உரிமைகளுக்கான தமிழ் மையத்தின் பொதுச் செயலர் கிருபாகரன் தெரிவித்தார்.

'அமெரிக்காவில் புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி மற்றும் புதிய ஐ.நா. செயலாளர் நாயகம் ஆகியோரின் உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈடுபட்டு வருகிறார்.

அதாவது செப் டெம்பர் 2015இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கிய போதிலும இதனை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

ஆகவே இது தொடர்பான அழுத்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காகவே இலங்கை தற்போது அனைத்துலக சமூகத்தின் உதவியை நாடிவருகிறது.

அனைத்துலக நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிப்பொறிமுறையை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஆனாலும் நாளுக்கு நாள் இலங்கையின் நிலைப்பாடு மாறிவருகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள் தொடர்ந்தும் அழிக்கப்படுகின்றனர்' என கிருபாகரன் குறிப்பிட்டார்.

இலங்கையின் அரசாங்கங்கள் மக்களுக்கும் அனைத்துலக சமூகத்திற்கும் வெற்று வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. 'இதுவரை இலங்கையானது இனப்பிரச்சினைக்கு எந்தவொரு சாதகமான அணுகுமுறையையும்கைக் கொள்ளவில்லை. மறுபுறத்தே, ஐ.நாவின் பரிந்துரைகள் குறிப்பாக, ஐ.நா செயலாளர் நாயகம், மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர், ஆணை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்பவர்களின் பரிந்துரைகளை இலங்கையில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் புறக்கணித்தே வருகின்றன' என கிருபாகரன் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை நிலைப்பாடுகள் தொடர்பாக அனைத்துலக சமூகம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பதுடன் இதன் முயற்சிகள் மேலும் விரைவுபடுத்தப்பட வேண்டியதும் இன்றியமையாததாகும் என கிருபாகரன் தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் - Easwaran Rutnam
வழிமூலம் - The Sunday leader
மொழியாக்கம் - நித்தியபாரதி

# காணி விடுவிப்புக்காக பிரிட்டனில் கவனயீர்ப்பு

(பிரிட்டன்)

தாயகத்தில் உறவுகளினால் மேற்கொள்ளப்படும் போராட்டங்களை வலுப்படுத்தி அவர்களது கரங்களை வலுப்படுத்தும் முகமாக பிரித்தானியாவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டமானது, நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் No 10, DOWNING STREET, WESTMINSTER, LONDON, SW1A 2AA என்னும் இடத்தில் இடம்பெற்றது.

இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள தமது நிலங்களை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவு மக்கள் வெயில் மற்றும் மழை பாராது வீதியோரம் அமர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில்



இக்கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, ஐ.நாவே சர்வதேச விசாரணையை வலியுறுத்து, தமிழ் மக்களின் காணிகளில் இருந்து இராணுவமே வெளியேறு, கேப்பாப்பிலவு மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளி உள்ளிட்ட பல்வேறு சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



**நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் இருபக்கத்திலும் முட்கள் செடிகளாக காணப்படுகிறது. அதே வேளை அயலிலுள்ள பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதால் சுகாதார சீர்கேடாகவும் காணப்படுகிறது. பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் செல்லும் வீதியாக இவ்வீதி உள்ளதால் இவ்வீதியைச் சுத்தம் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)**

# ட்ரம்பிற்கு எதிர்ப்புத்தெரிவித்து மெக்ஸிக்கோவில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மெக்ஸிக்கோவில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதித்தமை மற்றும் எல்லைச் சுவர் அமைப்பதற்கு மெக்ஸிக்கோ பெருந்தொகை பணத்தை செலுத்த வேண்டும் என கூறியுள்ளமை ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள மெக்ஸிக்கோ நாட்டவர்கள் மற்றும் மெக்ஸிக்கோ நாடு தொடர்பில் ட்ரம்ப் வகுத்துள்ள கொள்கைகள் பொருத்தமற்றவை. அது சமூகத்திற்கும் மாபெரும் அச்சுறுத்தலாக அமையும். குடியேற்றவாசிகளாலேயே அமெரிக்கா உருவானது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இனிவரும் காலங்களிலும் குடியேற்றவாசிகளால் அமெரிக்கா மேலும் விரிவடையும் என்பதையும் நாம் மறுக்கக் கூடாது. ட்ரம்பின் கொள்கைகள் ஏற்கமுடியாதவை' என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மற்றுமொரு ஆர்ப்பாட்டக்காரர், 'ட்ரம்ப் பித்து பிடித்தவர் போல் செயலாற்றுகிறார். சுவர் எழுப்புவது மற்றும் குடியேற்றவாசிகள் தொடர்பான அவரது கொள்கைகள் ஆகிய அனைத்திற்கும் நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்' என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று வாரங்களே ஆகியுள்ள நிலையில் அகதிகள் மற்றும் குடியேற்றவாசிகள் தொடர்பில் ட்ரம்ப் கடுமையாக நடந்துகொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மெக்ஸிக்கோவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சுவர் எழுப்பும் திட்டத்திற்கு மெக்ஸிக்கோ ஜனாதிபதி என்ரிக்கே பெனா நீட்டோ (Enrique Pena Nieto) சம்மதம் தெரிவிக்காத பட்சத்தில் அவருடனான சந்திப்பு நடைபெறாது என ட்ரம்ப் தனது டுவிட்டரில் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து ட்ரம்புடனான சந்திப்பை மெக்ஸிக்கோ இரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 986

Search for people, places and things — Nagendram Home

சிந்து





விமல்





சந்துரு




பியா




ஜனா



எம்.எம்

காதல் வலிதான்
பெரிய வலின்னு சொல்லிட்டு
இருக்கிறவங்க
கதவுக்கு இடையில
கையைவிட்டுப் பாருங்க
அப்போ தெரியும்
எந்த வலி பெரிய வலின்னு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 7 நாட்கள் கழித்து தலைமை செயலகத்துக்கு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வருகை

## அதிகாரிகளுடன் ஆலோசனை



பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் 7 நாட்கள் கழித்து முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று தலைமை செயலகத்துக்கு வந்தார். அங்கு அவர் தலைமைச் செயலாளர் மற்றும் உள் துறை செயலாளரிடம் ஆலோசனை நடத்தினார்.

முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கடந்த 5 ஆம் திகதி தலைமை செயலகத்துக்கு சென்று பணிகளை கவனித்தார்.

அன்று பிற்பகல் அவர் சசிகலாவுக்கு விட்டுக் கொடுக்கும் வகையில் முதல்வர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து ஓ.பன்னீர் செல்வத்தை, புதிய அரசு பொறுப்பு ஏற்கும் வரை முதலமைச்சர் பதவியில் தொடர வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக்கொண்டார். இதனால் தற்போதும் முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் நீடிக்கிறார்.

ஆனால் சசிகலா அணியுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அவர் தலைமை செயலகத்துக்கு செல்லவில்லை. கடந்த 7 நாட்களாக அவர் தலைமை செயலகத்துக்கு வந்து எந்த நிர்வாகப் பணிகளையும் செய்யாமல் இருந்தார்.

முதல்வர் மற்றும் அமைச்சர்கள் வராத காரணத்தால் மாநில அரசு நிர்வாகம் முடங்கி ஸ்தம்பித்து விட்டதாக சர்ச்சை எழுந்தது. இதைத் தொடர்ந்து 7 நாட்கள் கழித்து நேற்று மதியம் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமை செயலகத்துக்கு வந்தார்.

அவர் வீட்டில் இருந்து புறப்பட்டபோது, அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அவரை வாழ்த்தி கோஷமிட்டனர். அவர்கள் அனைவருக்கும் ஓ.பன்னீர் செல்வம் வணக்கம் தெரிவித்தபடி சென்றார்.

வழியில் தொண்டர்களுடன் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன், ஆறுகுட்டி எம்.எல்.ஏ. ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து ஓ.பன்னீர் செல்வம் காரை நிறுத்தி இருவரையும் தமது காரில் ஏற்றிக்கொண்டார்.

1.05 மணிக்கு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் கார் கோட்டைக்கு சென்று சேர்ந்தது. அங்கு அதிகாரிகள் அவரை வரவேற்றனர். இதையடுத்து அவர் தமது அறைக்கு சென்றார்.

அங்கு அவர் தலைமைச் செயலாளர் மற்றும் உள் துறை செயலாளரிடம் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு துறை உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.



இந்த ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாட்டில் தற்போதைய சட்டம்-ஒழுங்கு நிலவரம் பற்றி விவாதிக்கப்பட்டது. அது மட்டுமின்றி தமிழகத்தில் நிலவும் வரட்சி மற்றும் நதிநீர் பிரச்சினைகள் பற்றியும் பேசப்பட்டதாக தெரிகிறது.

ஓ.பன்னீர்செல்வம் தனி அணியாக பிரிந்து செயற்பட தொடங்கிய பின்பு நேற்று முதன்முறையாக தலைமைச் செயலகத்துக்கு வந்தால் உயர் அதிகாரிகள் மட்டத்தில் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.

அதே போன்று தலைமை செயலக பாதுகாப்பு அதிகாரிகளும் பரபரப்புடன் காணப்பட்டனர். ஓ.பன்னீர்செல்வம் வருகையை முன்னிட்டு தலைமை செயலகத்தில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கிடையே தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்துக்கு 12.15 மணிக்கு வந்தார். அவர் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்து பேசக்கூடும் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பன்னீர்செல்வம் வருவதற்கு முன்பே மதியம் 12.30 மணிக்கு மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார். (இ-7)

## 15 பேர் உயிருடன் எரித்துக் கொலை

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 15 பேரை உயிருடன் தீ வைத்து எரித்துக் கொன்ற சம்பவம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்காக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் களமிறங்கியுள்ளன.

எனினும் ஐ.எஸின் அராஜகங்கள் ஒழிந்தபாடில்லை, இந்நிலையில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கிராமத்தில் இருந்து தப்பித்து செல்ல முயன்ற 15 பேரை உயிருடன் தீவைத்து எரித்துக் கொன்ற சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கின் அல்ஷஜரா கிராமத்தில் வசிக்கும் மக்களையே இவ்வாறு கொடூரமாகக் கொலை செய்துள்ளனர்.

குழந்தைகள் உட்பட 15 பேரை தார் ஊற்றி தீ வைத்து எரித்துக் கொன்றுள்ளனர். இனிமேல் யாராவது தப்பித்து ஓட முயன்றால் அவர்களுக்கும் இதே கதி தான் என எச்சரித்துள்ளனர். (இ-7)

## ஓ.பி.எஸ்ஸுக்கு 3லட்சம் பேர் நேரில் சென்று ஆதரவளிப்பு

தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு கடந்த 5 நாட்களில் மாத்திரம் மூன்று இலட்சம் பேர் நேரில் சென்று ஆதரவளித்துள்ளனர். அத்தோடு மிஸ்கோல் மூலமாக சுமார் 35 இலட்சம் பேர் ஆதரவளித்துள்ளனர்.

தமிழக அரசியல் களத்தில் பன்னீர்செல்வமா? சசிகலாவா? என்ற போட்டி சூடு பிடித்துள்ள நிலையில் பன்னீர் செல்வத்திற்கான ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## விமான நிலையத்தில் நச்சு வாயு 50பயணிகளுக்கு மூச்சு திணறல்

(பெர்லின்)




ஜேர்மனி விமான நிலையத்தில் பரவிய நச்சு வாயுவால் 50 பயணிகளுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

ஜேர்மனியில் ஹாம்பர்க் நகரில் விமான நிலையம் உள்ளது.

நேற்று முன்தினம் அங்கு திடீரென ஒருவித நச்சு வாயு வெளியானது.

பின்னர் அது படிப்படியாக விமான நிலையம் முழுவதும் பரவியது.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

உடனே விமான நிலையத்தில் இருந்த பயணிகள் மற்றும் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

அங்கு பல மணி நேரம் விமானப் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டது. புறப்பட தயாராக இருந்த விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நச்சு வாயு பரவியதால் விமான நிலையத்தில் இருந்த ஊழியர்கள் மற்றும் பயணிகள் என 50 பேருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. அவர்களுக்கு கண் எரிச்சலும் உருவானது.

எனவே அவர்கள் அனைவரும் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

தீயணைப்பு படையினர் விரைந்து வந்து நச்சு வாயு பரவியதை தடுத்து நிறுத்தி சீரமைத்தனர். அதைத் தொடர்ந்து மீண்டும் விமான நிலையம் செயற்படத் தொடங்கியது. (இ-12)

## சிரியாவின் முக்கிய நகருக்குள் துருக்கி படையினர் நுழைந்தனர்

(பெய்ரூட்)

சிரியாவின் முக்கிய நகரத்தை ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக துருக்கிப் படையினரும் சிரிய கிளர்ச்சியாளர்களும் போராடி வருகின்றனர்.



சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது துருக்கி படைகள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள அல்பாப் நகரம், ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில இருந்து வருகிறது. இந்த நகரத்தை ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக துருக்கிப் படையினரும் சிரிய கிளர்ச்சியாளர்களும் போராடி வருகின்றனர்.

அவர்கள் அல்பாப் நகருகுள் நுழைந்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுபற்றி சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் கூறுகையில், "அல்பாப் நகரின் மேற்கு புறநகர்ப் பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியிலிருந்து துருக்கி படைகளும், சிரியா கிளர்ச்சியாளர்களும் மீட்டு, தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்து விட்டனர். இதில் துருக்கியின் வான்வழி தாக்குதல் முக்கிய இடம் பிடித்துள்ளது. இந்தத் தாக்குதலின்போது மக்களில் 6 பேர் பலியாகி விட்டனர்" என்று தெரிவித்துள்ளது. (இ-12)





புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் நடத்தப்பட்ட ஆய்வரங்கத் தொடர் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இ. தவராசா தலைமையுரை ஆற்றுவதையும் தோழர் சி.கா.செந்திவேல் ஆய்வுரை நிகழ்த்துவதையும் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.




கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். **(படங்கள் :- கரணவாய் செய்திகள்)**



கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் கே.கிரிதரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸ் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். **(படம் : மகாலிங்கம்)**






குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன் – ஒஸ்லோ அமைப்பால் பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இணையத் தலைவர் சி.சிலுவைதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் கே.கலியுகன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், பெற்றோர்களையும் படங்களில் காணலாம்.




பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழக ஏற்பாட்டில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் 29ஆவது ஆண்டு நிவைு தினம் சாந்தை விநாயகர் பொது மைதானத்தில் நா.முருகானந்தம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் மற்றும் விருந்தினர்களாக எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழக அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத்தலைவர், இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதில் பெற்றோரை இழந்த மாணவர்கள் 29 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.


நல்லை செல்வா அகில இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் தெரிவு செய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் ஏழாலை தெற்கு பாரதி முன்பள்ளியில் இடம்பெற்றது. நல்லை செல்வா சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் லயன்.ஏ.மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தார். மன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இலவச கண்பரிசோதனையின் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான மூக்குக்கண்ணாடிகளே மாகாணசபை உறுப்பினரால் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், மன்றத்தின் தலைவர் மனோகரன் மற்றும் பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்: கிஷோர்)




யாழ்.வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



# சிறுவர் அரங்கம்

## புழுதிச் சாலையில் ஒரு வைரம்

...**சி**றிது நேரத்தில் அப் பெண்ணின் கணவன் வந்துவிட்டான். மித மிஞ்சிய போதையில் இருந்தான். கால்கள் தரையில் நிற்கவில்லை...

"ஏய்... இங்க வாடி... நான் வந்துட்டேன்டி... என்ன பண்ற.. சாப்பாடு கொண்டா" என்று சத்தமாகக் கேட்டான்.

உடனே அவனிடம் வந்த குரு, "இதோ நான் தருகிறேன், நீ கேட்டதை," என்றார்.

பின்னர், "மழையில் மாட்டிக் கொண்டேன். உன் மனைவி தான் இங்கு தங்க அன்போடு அனுமதித்தார். அதற்கு பிரதியுபகாரமாக நல்ல ஒயினும் சாப்பிட மீனும் கொண்டு வந்துள்ளேன்," என்றார் குரு.

குடிகார கணவனுக்கு ஒரே சந்தோஷம். மொத்த ஒயினையும் குடித்தான். சாப்பிட்டான். அப்படியே தரையில் சரிந்து விழுந்து தூங்கிவிட்டான்.



குருவோ, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டார். விடிந்தது. கணவன் எழுந்து பார்த்தான். முந்தைய இரவு நடந்தது எதுவும் அவனுக்கு நினைவிலில்லை.

குருவைப் பார்த்தான். "யார் நீ.. எங்கிருந்து வருகிறாய்? என் வீட்டில் என்ன வேலை?" என்று கேள்விகளை வீசினான்.

புன்னகை மாறாத முகத்துடன் அவனது கேள்விகளை எதிர்கொண்ட குரு, "நான் இந்த நாட்டு மன்னனின் குரு. பக்கத்து நகருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்," என்றார்.

ராஜகுரு என்றதும், அந்த குடிகார கணவன் திடுக்கிட்டான். தான் நடந்து கொண்டதை நினைத்து வெட்கமடைந்தான். தனது செயல் மற்றும் பேச்சுக்காக மன்னிப்பு கோரினான்.

குருவின் முகத்தில் புன்னகை மாறவில்லை. "வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமில்லை. வாழ்க்கை குறுகியது. அந்த குறுகிய காலத்தில், குடி, சூதாட்டம் என இருந்தால், உடனிருக்கும் நல்ல உறவுகளை இழந்துவிடுவாய்.. குடும்பமே இல்லாமல் போய்விடும் என்பது தெரியவில்லையா?", என்றார்.

ஏதோ ஒரு ஆழ்ந்த கனவிலிருந்து விழித்துக் கொண்டவனைப் போல திடுக்கிட்டு எழுந்தான் குடிகார கணவன்.

"ஆம்.. நீங்கள் சொல்வது சரிதான் குருவே...", என்றவன், "உங்களின் இந்த அற்புதமான அறிவுரைக்கு நான் என்ன திருப்பித் தரப் போகிறேன்," என உருகினான்.

"கொஞ்ச தூரம் உங்களின் பொருள்களைத் தூக்கிக் கொண்டு உடன் வருகிறேன். ஒரு சிறிய சேவகம் செய்த திருப்தியாவது கிடைக்கும்," என்றான் திருந்திய அந்த குடிகாரன். "சரி... உன் விருப்பம்," என்றார் குரு.

இருவரும் நடக்க ஆரம்பித்தனர். மூன்று மைல்கள் தாண்டியாயிற்று. அவனை திரும்பிப் போகச் சொன்னார் குரு. இன்னும் 5 மைல்கள் உடன் வருவதாய் அவன் தெரிவித்தான்.

ஐந்து மைல்கள் கடந்தது. 'சரி.. நீ போகலாம்' என்றார் குரு.

"இன்னும் ஒரு பத்து மைல்கள் வருகிறேனே..." என்று மன்றாடினான்.

பத்து மைல்கள் கடந்ததும், கொஞ்சம் கண்டிப்பான குரலில், "நீ இப்போது வீட்டுக்குத் திரும்பலாம்," என்றார் குரு.

"குருவே, இனி நான் பழைய பாதைக்கு திரும்புவதாக இல்லை. மிச்சமிருக்கும் நாளெல்லாம் தங்கள் வழியைப் பின்பற்றி நடப்பேன்!," என்றான் உறுதியான குரலில... (முற்றும்)

## 02.2017 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1918 - சோவியத் ஒன்றியம் கிரெகோரியின் நாட்காட்டியை ஏற்றுக் கொண்டது (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி பெப்ரவரி 1).
- 1919 - போலந்து-சோவியத் போர் ஆரம்பமானது.
- 1924 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1927 - யூகொஸ்லாவியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 700 பேர் இறந்தனர்.
- 1929 - சிக்காகோவில் வேலண்டைன் நாளன்று "அல் காப்போன்" என்பவனின் எதிராளிகள் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பசிர் பஞ்சாங் என்ற இடத்தில் ஜப்பானியர்களின் தாக்குதல் ஆரம்பித்தது.
- 1956 - சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1961 - 103ஆவது தனிமம் லோரென்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1966 - அவுஸ்திரேலியாவில் முன்னர் பாவனையில் இருந்த அவுஸ்திரேலிய பவுண்டிற்குப் பதிலாக அவுஸ்திரேலிய டொலர் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1979 - ஆப்கானிஸ்தானுக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் அடொல்ஃப் டப்ஸ் காபூலில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் காவற்துறையினருக்கும் கடத்தல்காரருக்கும் இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் அகப்பட்டு இறந்தார்.
- 1981 - டப்ளினில் இரவுவிடுதி ஒன்றில் இடம்பெற்ற தீயில் 48 பேர் கொல்லப்பட்டனர்.
- 1987 - யாழ்ப்பாணம், கைதடியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பொன்னம்மான் உட்பட ஏழு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 1987 - தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி நிதர்சனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 - ஜிபிஎஸ் திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.
- 1989 - யூனியன் கார்பைட் நிறுவனம் 1984 போபால் அழிவிற்காக இந்திய அரசிற்கு 470 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்ட ஈடாக வழங்க சம்மதித்தது.
- 1989 - சாத்தானின் கவிதைகள் நூலை எழுதியதற்காக சல்மான் ருஷ்டிக்கு ஈரான் தலைவர் ருஹொல்லா கொமெய்னி மரண தண்டனை விதித்தார்.
- 1990 - பெங்களூருவில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 92 பேர் கொல்லப்பட்டு 54 பேர் காயங்களுடன் தப்பினர்.
- 1998 - கோயம்புத்தூர் நகரின் பல இடங்களில் குண்டுகள் வெடித்ததில் 58 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் காயமுற்றனர்.
- 2000 - நியர் ஷூமேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளின் சுற்று வட்டத்துள் பிரவேசித்தது. சிறுகோள் ஒன்றின் சுற்றுக்குள் சென்ற முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 2005 - லெபனானின் முன்னாள் பிரதமர் ரஃபீக் ஹரீரி சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2005 - பிலிப்பீன்சில் மணிலா நகரில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் 7 பேர் கொல்லப்பட்டு 151 பேர் காயமடைந்தனர்.

பிறப்புகள்

- 1483 - சாகிருத்தீன் பாபர், முகலாயப் பேரரசர். (இ. 1530)
- 1869 - சார்ல்ஸ் வில்சன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (இ. 1959)
- 1898 - பிரிட்ஸ் ஸ்விக்கி, அமெரிக்க இயற்பியலாலர், வானியலாளர். (இ. 1974)
- 1939 - யூஜின் ஃபாமா, அமெரிக்கப் பொருளியல் நிபுணர்.
- 1952 - சுஷ்மா சுவராஜ், இந்திய அரசியல்வாதி.

இறப்புகள்

- 269 - புனித வேலண்டைன், உரோமையில் வாழ்ந்த கத்தோலிக்க ஆயர்.
- 1779 - ஜேம்ஸ் குக், பிரித்தானிய கப்பற் தளபதி, நாடுகாண்பயணி. (பி. 1728)
- 1943 டேவிட் இல்பேர்ட்டு, செருமானியக் கணிதவியலர். (பி. 1862)
- 1968 - அ. ந. கந்தசாமி, ஈழத்து எழுத்தாளர். (பி. 1924)
- 1970 - ஹார்பட் ஸ்ருட்வீக், ஆங்கிலேயத் துடுப்பாளர். (பி. 1880)
- 1975 - பி. ஜி. வுட்ஹவுஸ், ஆங்கிலேய எழுத்தாளர், கவிஞர். (பி. 1881)
- 2003 - டோலி, ஸ்கொட்லாந்து படியாக்கப்பட்ட ஆடு. (பி. 1996)

சிறப்பு நாள்

- காதலர் தினம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 70 | 140 | 100 | 100 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 | 200 | 150 | 200 | 180 |
| தக்காளி | 60 | 100 | 70 | 70 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 100 | 80 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 50 | 100 | 80 | 60 | 60 | 120 | 30 |
| பூசணி | 60 | 100 | 50 | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 60 | 60 | 100 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 120 | 120 | 120 | 140 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 120 | 160 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 200 | 80 | 150 | 150 | 250 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 150 | 200 | 120 | 200 | 250 | 160 | 300 |
| லீக்ஸ் | 60 | 100 | 150 | 80 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 60 | 50 | 60 | 80 | 80 |
| கறி மிளகாய் | 150 | 300 | 120 | 200 | 140 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 | 700 | 600 | 300 | 600 |
| போஞ்சி | 120 | 100 | 80 | 100 | 120 | 120 | 100 |
| கத்தரித் தம்புரா | 80 | 100 | 60 | 100 | 100 | 80 | 100 |
| கீரை - பிடி | 30 | 50 | 80 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 150 | 120 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 30 | 50 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 | - | 200 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 60 | 60 | 50 | 80 | 60 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 50 | 90 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 60 | 60 | 50 | 60 | 70 |

அவன் போறான் குடிகாரன்
எனக்கு ஊத்தடி கள்ளை.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கைக்கான காலஅவகாசம் தமிழருக்கு நாசம் செய்யும்

இலங்கைத் தமிழ் மக்களுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் துரோகம் செய்தனர். சர்வதேச சமூகம் நம்ப வைத்துக் கழுத்தறுத்தது. இவ்வாறு சொல்வதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

வன்னியில் பெரும் யுத்தம் நடந்து தமிழின அழிப்பு இடம்பெற்ற போதிலும் இன்றுவரை ஈழத் தமிழ் மக்கள் ஏதிலிகளாகவே வாழ்கின்ற நிலைமையில் உள்ளனர்.

உலகில் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்ட ஐ.நா சபையால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை ஆட்சியாளர்கள் யுத்தம் நடத்தியபோது ஐ.நா சபை பார்த்துக் கொள்ளும்; அண்டை நாடான இந்தியா காப்பாற்றும்; அமெரிக்கா விடாது என்றுதான் நம்பியிருந்தோம்.

ஆனால் போர்க்களத்தில் தமிழ் மக்களை அநாதைகளாக கைவிட்டு அங்கிருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களே முதலில் வெளியேறின. இதிலிருந்து சர்வதேச சமூகத்தின் கபட நாடகத்தை உணர முடியும்.

போர் முற்றுப் பெற்று சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களை கொடும் ஆட்சியர் முட்கம்பி வேலிகளுக்குள் அடைத்த போது,

ஐ.நா பொதுச் செயலாளரான பான் கீ மூன் அப்போது உலங்குவானூர்தியில் வந்து போனார். இருந்தும் தமிழ் மக்கள் தொடர்பிலோ அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட பேரழிப்புக் குறித்தோ அவர் எதுவும் பேச மறந்தார்.

இந்நிலையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடரில் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதாயினும் இன்றுவரை அந்த விடயம் காலம் கடத்தப்படும் நாடகத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

இலங்கை ஆட்சியாளர்கள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐ.நா அமைப்பிடம் தமது கருத்தை திணித்து விடுகின்றனர்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தொடர்பில் ஐ.நா சபையில் கதைப்பதற்கு யாரும் இல்லை என்ற நிலைமையே காணப்படுகிறது.

இந்தியாவை நம்புங்கள் என்று கூறிய பிரதமர் மோடியும் இன்றுவரை ஈழத் தமிழர் உரிமை விடயம் தொடர்பில் இலங்கை அரசுக்கு எந்த வித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை.

மாறாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற ட்ரம்ப் நமது பிரச்சினையில் அறவே தலையிடார் போல் தெரிகிறது.

ஆக, ஈழத் தமிழர் தொடர்பில் சர்வதேசத்தின் நிலைமை இதுவென்றால், உள்நாட்டில் தமிழர்களின் அரசியல் தலைமையும் இலங்கை அரசுடன் சேர்ந்து கொண்டு தமிழ் மக்களின் அவலங்கள் பற்றி சிறிது சுடச் சிந்திக்காதவர்களாக இருக்கின்றனர்.

இதுவே இன்றைய யதார்த்த நிலை. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில் ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு மேலும் காலஅவகாசம் வழங்கப்படக் கூடிய சூழ்நிலை இருப்பதும் அதற்கு நம்மவர்கள் ஆமாப் போடுவதுமாகும்.

எது எவ்வாறாயினும் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு மேலும் காலஅவகாசம் வழங்கப்படுமாயின் அது ஈழத் தமிழர்களுக்கு மிகப் பெரிய கெடுதியைச் செய்யும் என்பதுடன்,

இலங்கையில் ஈழத் தமிழர்களின் உடைமைகள், உரிமைகள் தொடர்பில் மிகப்பெரிய இழப்புக்களையும் கொண்டு வரும்.

ஆதலால் இலங்கை அரசுக்குக் காலஅவகாசம் வழங்குதல் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது இதை வலியுறுத்துவதே தமிழர் தரப்பின் முதற் பணியாக இருக்க வேண்டும்.

# ஆகக்கூடிய அதிகாரங்களைப் பெற தமிழ்பேசும் சமூகம் முயற்சிக்க வேண்டும்

## கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்து

(ஏறாவூர்)

உருவாக்கப்படவிருக்கின்ற புதிய அரசியலமைப்பிலே தமிழ்,முஸ்லிம் சமூகங்கள் கூட்டாக இணைந்து ஆகக் கூடிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள முயற்சித்து வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூரில்நேற்று உள்ளூராட்சி மன்ற செயற்றிட்டங்களின் அமுலாக்கம் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், தமிழ், முஸ்லிம் மக்களினதும் சமூகத் தலைமைகளினதும் உறவு தொடர்ச்சியாக வலுப்படுத்தப்பட்டு எங்களுக்குள் ஒரு தீர்க்கமான உடன்பாடு எய்தப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீல.மு.கா. தலைவர் றவூப் ஹக்கீம்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் உறுதியாக உள்ளனர்.

அதற்கான முன்னெடுப்புக்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள மனப்பூர்வமாக இணைந்தால் அதிகாரப் பகிர்விலே பெரும்பான்மை அரசாங்கத்திடமிருந்து ஆகக் கூடிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இரண்டு சிறுபான்மைச் சமூகங்களும் உடன் பாட்டோடு ஒத்திசைவாகக் குரல் கொடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைந்து கொள்ள வேண்டும்.

இரண்டு சமூகங்களுக்குமிடையில் அதிக விட்டுக்கொடுப்புக்கள் தேவைப் படுகின்ற அதேவேளை இரு சமூகங்களினதும் கௌரவம் பாதிக்கப்படாத வகையில் பரஸ்பர புரிந்துணர்வும் உடன்பாடும் தேவை.


இன்னமும் பிளவுபட்ட சமூகங்களாக நாம் இருப்பது இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் அபாயம் இருப்பதால் இணக்கப்பாடு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது.

நீடித்து நிலைத்து நிற்கும் சமாதானமும் சகவாழ்வும் நமது இவ்விரு சமூகங் களினதும் தியாகங்களில் தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**உடற்பயிற்சி செய்யாவிட்டால்?**

உடற்பயிற்சி செய்யாதவர்களின் உடல் வலிமை பெறுவதில்லை. அவர்களுக்குப் புத்துணர்வும் கிடைபதில்லை. எப்போதும் சோர்வாகவே இருப்பார்கள். என்னால் எதுவும் முடியவில்லை என்ற உணர்வு மேலோங்கி , வலிமை இழந்து, நடக்க இயலாத நிலை உருவாகும். எத்தனை வயதானவர்களும் வேறு எந்த உடற்பயிற்சியும் செய்யவில்லையென்றாலும் தினமும் சிறிது தூரமாவது நடக்கலாம், நடக்க வேண்டும். காரில் பயணம செய்வதும் உடற் பயிற்சி இல்லாமையும் அசாதாரணஉணவுப்பழக்கங்களும் நமதுஉடல்ஆரோக்கியத்தைச் சிதைக்கின்றன.




(தொடரும்)

# சாஸ்திரங்கள்

✦ தென்றல் காற்று அதிர்ஷ்டத்தையும் சூறாவளிக் காற்று துரதிர்ஷ்டத்தையும் குறிக்கும். நம் வீட்டை நோக்கிப் பலமான காற்றடிக்கும் போது வீட்டுக் கதவுகளையும் ஜன்னல்களையும் உடனே மூடி விடவேண்டும். இல்லையெனில் அந்தக் காற்றானது உங்கள் வீட்டில் உள்ள செல்வத்தையும் அதிர்ஷ்டத்தையும் கொண்டு போய்விடும்.

-பிரகன்னார தீபம்

✦ இறந்தவர்களின் ஆத்மாக்கள் வண்ணத்துப் பூச்சியினுள் நுழைந்து இறப்பு ஏற்பட்ட நாளிலிருந்து கொஞ்சக்காலம் வரை நம் வீட்டைச் சுற்றி வருமாம். ஆகவே மரணம் ஏற்பட்ட ஒரு வீட்டிற்குள் வண்ணத்துப் பூச்சி அடிக்கடி பறந்து வந்து போய்க்கொண்டிருந்தால் அந்த வீட்டில் அந்த ஆன்மாக்களின் ஆசியால் சந்தோஷம், சுபகாரிய நிகழ்வு, தீர்க்காயுள் உண்டாகும.

-சகுன சாஸ்திரம்

✦ வீட்டின் வெளிப்புறச் சுவர்களில் கழுகு படம் வரைந்து வைத்தால் எதிரிகள் வாலாட்டமாட்டார்கள். இது எதிரிகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றும். ஆனால வீட்டின் உட்புறச்சுவர்களில் கழுகு படம் வரைந்து வைத்தால் நேர்மாறான பலன்களே உண்டாகும். அதாவது எதிரிகளிடம் நீங்கள் வலியப் போய் சிக்கிக் கொள்வீர்கள்.

-ஓவிய சாஸ்திரம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை **யாழ்.பிரதேசத்தில** தாளையம்பதி வீதி, துர்க்கையம்மன் கோவிலடி, வேலாயுதம் வீதி, பத்தை மேனி, பாரதி வீதி, தம் பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** சாந்தசோலைக்கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், முதலியார்குளம், நெளுக் குளத்திலிருந்து பறயனாளங்குளம் வரை, பறயனா ளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து கங்கன்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரை, பிரமனாலங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக் கொடி வரை , கோவிற்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்பவ வரை, தெற்கு பிள்ளையார்குளம், ஓவியா விடுதி, எஸ்வீஆர்.அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, முதலாம் குறுக்குத் தெரு வவுனியா ஆகிய பகுதிகளிலும் வவுனியா நகரம் , பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து கண்டி வீதி, மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரை, கத்தார் சின்னக்குளம் உட்பட மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், வைரவப் புளியங்குளம், குருமன்காடு, பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரை, பெரிய நொச்சிக்குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வவுனியா வைத்தியசாலை, மறக்காறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, தாண்டிக்குளத்திலிருந்து சின்ன வலயன்கட்டு வரை, வவுனியா புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து புளியங்குளம் வரை, திருநாவற்குளம, சாந்தசோலை, அக்போபுர, கொக்கெலிய, வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம் விமானப்படை முகாம், ஓமந்தைத் தொழில்நுட்பக் கல்லூரி, ஓமந்தை யூனியன் அலியன்ஸ் லிமிற்றட், வரன் அரிசி ஆலை, நொதேர்ண் பார்ம், மறக்காறம்பளை பயிற்சிக் கூடம், கொககெலிய இராணுவ முகாம, மீன்பிடி வலைத் தொழிற்சாலை, ஓமந்தை **AMP Ceylon PVT (LTD)** ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, பறயனாளங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, பெரியபண்டி விரிச்சானிலிருந்து மடு வரை, தச்சணாமருதமடுவிலிருந்து பள்ளமடு வரை, விடத்தற் தீவிலிருந்து வெள்ளாங்குளம் வரை, வங்காலை கடற் படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத திணைக்களம், மன்னார் ,தொலைத் தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டிபம் கவுஸ், மீனபிடிசமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற் படைமுகாம், சீனத் துறை முகம், சன்னார் இராணுவ முகாம், கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ எல்லா விலங்குகளையும் எல்லா தேவ தூதர்களையும் விட மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. தேவர்களும் மீண்டும் கீழே வந்து மனித உடல் வாயிலாகவே முக்தி பெறமுடி யும். மனிதன் மட்டுமே பூரணமடைகிறான். தேவர்களாலும் அடையமுடியாது.

❖ நமது நாட்டுக்கு இப்போது வேண்டியது இரும்பை ஒத்த தசைகளும் உருக்கைப் போன்ற நரம்புகளுமே. மேலும் எதனாலும் தடைபடாத உலகின் விந்தைகளையும் மறை பொருட்களையும் ஊடுருவிப் பார்க்கவும் கடலின் அடிவரை செல்ல நேரிட்டாலும் எவ்வாறாயினும் கருதியதை முடிக்கும் ஆற்றல் பெற்றவும் ஆன்மீகப் பெரும் வலிமை கொண்ட மனங்களுமே.

❖ நாம் போதிய காலம் அழுதாயிற்று. இனியும் அழ வேண்டாம். எழுந்து நின்று ஆண் மையுடைவர்கள் ஆகு ங்கள். மனிதர்களை உருவாக்கும் மதமே நமக்கு வேண் டுவது. வீரர்களாக்கும் கொள்கைகளே நமக்குத் தேவை. எல்லா வகையிலும் வீரர்களை உருவாக்கும் கல்வியே நம க்கு வேண்டுவது. இதுவே உண்மைக்கு உரைகல். உங் கள் உடலையும் அறிவையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிடு. அதில் உயிரில்லை. அது உண் மையானதல்ல. உண்மை வலிமை தரும். உண்மை தூய்மையாகும். உண்மை எல்லா அறிவுமாகும். உண்மை வலிமைதர வேண்டும். ஒளிவீச வேண்டும். ஆற்றல் பொழிய வேண்டும்.

# இமையாணன் மத்தி வி.க. நடத்தும் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டி

## ரெட் கிங்ஸ், பிளாக் ஹொக்ஸ் வெற்றி



இமையாணன் மத்தியின் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டிகள் 12.02.2017 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

காலை இடம்பெற்ற முதலாவது போட்டியில் ரெட் கிங்ஸ் அணியை எதிர்த்து இமையூர் லயன்ஸ் அணி மோதியது.

பரபரப்பான போட்டியில் 03:02 என ரெட் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக டினா தெரிவானார் .

இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் பிளாக் ஹொக்ஸ் அணியை எதிர்த்து ஏலியன் வோய்ஸ் அணி மோதியது.

நடைபெற்ற போட்டியில் 02:01 என்ற அடிப்படையில் பிளாக் ஹொக்ஸ் அணி வெற்றி பெற்றது.

இதில் ஆட்டநாயகனாக சுலக்சன் தெரிவானார். (க)

# இறுதி போட்டிக்குள் நுழைந்தது சங்கானை King star அணி

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 60வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தும் யங்கம்பன்ஸ் வைர விழாவின் மின்னொளியிலான கிரிக்கெட் தொடரில் (11/02/2017) அன்று இடம் பெற்ற மின்னொளியிலான மாவட்ட king பட்டத்திற்கான மென்பந்தாட்ட தொடரின் அரை இறுதியாட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து சங்கானை king star அணி மோதிக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வீனஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அந்த வகையில் நிர்ணயிக்கப்பட்ட 7 ஓவர் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 56 ஓட்டங்களை பெற்றது. வீனஸ் அணியின் நிரோஜன்13 ஓட்டங்களையும், விமல்21 ஓட்டங்களையும் பெற்றனர். King star அணி சார்பாக சூரி 3 .அயன்.1 கிரு 2 விக்கெட்டை சாய்த்தனர்.

57என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய king star அணி 7 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழப்பிற்கு இலக்கை எட்டியது. முதல் துடுப்பாட்டத்தில் சற்றுத் தடுமாறிய king star அவ் அணியை சரிவிலிருந்து மீட்டு வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார் திலக்சன். அதிரடியாக ஆடிய திலக்சன் 44 ஓட்டங்களை குவித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

வீனஸ் அணி சார்பாக விமல், 3. பிரதீபன் 2, நிரோஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இறுதியில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டிய king star அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது (க)





மாவட்ட மட்ட கயிறு இழுத்தல் போட்டியில் (10.02.2017) அன்று நடைபெற்ற போட்டியில் நல்லூர் பிரதேசம் சார்பாக பங்குபற்றி யாழ்.மாவட்ட சம்பியனாகிய அரியாலை உதயசூரியன் வி.க பெண்கள் அணியினரை படத்தில் காணலாம்.

# கிளி.மத்தியுடன் நட்புறவான கிரிக்கெட்

## தெல்லிப்பழை மகாஜனா இனிங்ஸ் வெற்றி

கிளி.மத்திய மகா வித்தியாலயத்துடனான நட்புறவு ரீதியிலான 19 வயது கிரிக்கெட் போட்டியில் மகாஜனா இனிங்ஸ் மற்றும் 101 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டி கடந்த சனி,ஞாயிறு தினங்களில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி/ மத்திய மகா வித்தியாலயம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களை பெற்றது. பதிலளித்து துடுப்பெடுத்தாடிய மகாஜனா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 385 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸ்சுக்காக துடுப்பெடுத்தாடிய கிளி. மத்தி 175 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழக்க மகாஜனா இனிங்ஸ் மற்றும் 101 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

மகாஜனா சார்பில் துடுப்பாட்டத்தில் ஜசிந்தன் 60, வற்சலன் 52, தயுஸ்ரன் 45, முரளிதரன் 36 ஓட்டங்கள் என பெற்றனர்.

மகாஜனா சார்பில் முதலாவது இனிங்ஸில் தயுஸ்ரன் 3, ஜசிந்தன் 2, கனிஸ்ரன் 2, சுஜீவன் 2 விக்கெட்டுக் களையும் இரண்டாவது இனிங்ஸில் சர்மிலன் 6, சாருஜன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (க)

# கரவெட்டி ஞானம்ஸை வீழ்த்தி மாலுசந்தி மைக்கல் சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவில் ஒரு அங்கமான ஆண்களுக்கான கபடி இறுதிப் போட்டி 12.01.2017 அன்று வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

இப்போட்டியில் 54: 39 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கரவெட்டி பிரதேச செயலக 2017ஆம் ஆண்டுக்கான கபடி சம்பியனாகியது மாலுசந்தி மைக்கல் அணி. (க)

### கரவெட்டி பிரதேச செயலக எல்லே தொடர்

# இமையாணன் இளைஞரை வீழ்த்தி கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியன்



கரவெட்டி பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டியின் முதலாவது ஆட்டத்தில் கரணவாய் மத்தி அணியையும் இரண்டாவது போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தையும் அரையிறுதியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தையும் இறுதிப்போட்டியில் இமையாணன் இளைஞர் அணியையும் வெற்றி கொண்டு வாகை சூடியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஹயஸ் - பேருந்து விபத்து

## சாரதி உட்பட நால்வர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கச்சேரி நல்லூர் வீதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற ஹயஸ்வானும் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று நண்பகல் நல்லூர் பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன், சுற்றுலாப் பயணிகளின் சாரதி உள்ளிட்ட நான்கு பேர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் ஹயஸ் வான் ஒன்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்று கொண்டிருந்துள்ளது.

அவ்வேளை நாவலர் வீதியிலிருந்து ஏ9 வீதியை நோக்கி பயணித்த சுற்றுலாப் பயணிகளின் பேருந்து சந்தியை கடக்க முற்பட்ட வேளையில் இரு வாகனங்களும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்தின் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நால்வரும் உடனடியாக அங்கிருந்தவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குறித்த விபத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாத நிலையில் விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

### விடுதலைப் புலிகளி ...

காலோசிதமான முயற்சியாகும்.

அரந்தலாவ பிக்குகள் கொலைச் சம்பவத்தின் பின்னணியில் கருணா உள்ளார் என்று கூறப்பட்டாலும் அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இல்லை.

அதேபோல் 2004ஆம் ஆண்டில் அவர் புலிகளிடத்திலிருந்து விலகி வந்தமையும் யுத்தத்தினை வெற்றி கொள்ள சாதகமாக அமைந்தது.

அதேபோல் கருணாவையும் அவரின் கட்சியினையும் தமிழ் மக்கள் ஏற்றாலும் ஏற்காவிடினும் தற்போது மக்களை தூண்டிவிட்டுக் கொண்டிருப்பவர்களை பார்க்கிலும் கருணா சிறந்தவர் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதனால் கருணாவை தண்டிக்க வேண்டுமாயின் அதற்கு முன்பாக கடந்த அரசாங்கம் விடுவித்த 11 ஆயிரம் புனர்வாழ்வளித்த போராளிகளையும் தண்டிக்க வேண்டும் என உதய கம்மன்பில உரையாற்றிருந்தார். (செ-11)

### சொத்துக் குவிப்பு ...

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, அவரது தோழியும் தற்போதைய அதிமுக பொதுச் செயலருமான சசிகலா உள்ளிட்டோருக்கு எதிரான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் இன்று காலை 10.30 மணிக்கு அறிவிக்க உள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம், கர்நாடக உயர்நீதிமன்றம், ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோரை விடுதலை செய்து தீர்ப்பளித்தது. அதற்கு முன்னதாக, சிறப்பு நீதிமன்றம் 2014ஆம் ஆண்டு அவர்களுக்கு விதித்த தண்டனையை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

இதை எதிர்த்து, கர்நாடக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. திமுகவின் பொதுச் செயலர் க. அன்பழகனும் இதில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அதுதொடர்பான வழக்கு விசாரணை முடிவடைந்து, கடந்த 2016ஆம் ஆண்டு யூன் 7ஆம் திகதி தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அறிவிக்கப்படும் என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதிபதிகள், பினாக்கி சந்திர கோஷ் மற்றும் அமிதவ் ராய் ஆகியோர் கொண்ட அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்க உள்ளது.

கடந்த 1991-96ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், 66.65 கோடி ரூபாய்க்கு வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் ஜெயலலிதா, சசிகலா, வி.என். சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோர் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நான்கு ஆண்டு சிறை தண்டனை விதித்த நீதிமன்றம், 100 கோடி ரூபாய் அபராதம் விதித்தது.

இதேவேளை தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ளவர் யார் என்ற இழுபறியில் உள்ள ஓ. பன்னீர்செல்வம் மற்றும் சசிகலா இடையே மேற்படி தீர்ப்பு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளதால் முழு தமிழகமும் நீதிமன்ற தீர்ப்பை பெரும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

### கட்டுப்பாட்டு விலை ...

ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ச.தொ.ச மொத்த விற்பனை நிலையங்களிலும் சில சிறப்பு அங்காடிகளிலும் மாத்திரம் அரிசியை கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவு செய்யக் கூடியதாக இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் தாம் அதிக விலைக்கு கொள்வனவு செய்த அரிசி வகைகளை கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய முடியாதுள்ளதாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதும் அதிக விலையில் அரிசியை விற்பனை செய்யும் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் முகமாக தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ஹசித திலகரட்ன தெரிவித்துள்ளார். (செ-11)

### வறண்ட நிலங்கள் ...

லாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

தற்போதைய வறட்சி காரணமாக வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் விவசாயம் ஸ்தம்பித நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

பூகோளம் வெப்பமடைவதாலும் சூரியனில் இருந்து திடீரென வெப்ப ஒளிவட்டம் தோன்றி வெப்பத்தை அதிக அளவில் வெளியிட்டிருப்பதனாலும் கூடிய வெப்ப நிலைமை அடுத்த சில வருடங்களுக்குத் தொடர்ந்து நிலவும் என வானிலை அவதானிப்பு நிலையத்தினர் தெரிவித்திருந்தனர்.

வட மாகாணம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் உட்கட்டமைப்புக்கள் சிதைவடைந்துள்ளதுடன், நிதியூட்டம் குறைந்த பிரதேசமாகவும் திகழும் நிலையில் இயற்கையின் பாதிப்பான கடும் வறட்சியையும் இம்முறை மக்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

அதன்படி வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 91 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் வறட்சி காரணமாக 64 ஆயிரத்திற்கும் குறைவான ஹெக்டேயரில் மாத்திரமே நெல் பயிரிடப்பட்டது.

பயிரிடப்பட்ட நிலங்களிலும் நீர் போதியளவு இன்மையால் நெற்பயிர்கள் கருகி நாசமடைந்திருந்தன.

இந்த நிலையில் கடும் வறட்சியின் மத்தியிலும் நீர் பாய்ச்சி காப்பாற்றி வந்த நெற்பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாராகியுள்ள நிலையில், சில இடங்களில் அறுவடை பாரியளவில் நடைபெறும் நிலையிலுமே நேற்றைய தினம் திடீர் மழை பெய்துள்ளது. இதனால் அறுவடை பாதிப்படைய நேரிட்டுள்ளது.

முற்றிய நெற்கதிர்களும் மழையில் நனைந்து நட்டமடைய நேரிட்டுள்ளது. இவ்வாறு நேற்றைய தினம் மாலை பெய்த மழையின் காரணமாக பல இடங்களில் அறுவடையும் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், வவுனியாவிலும் ஆங்காங்கே பரவலாக மழை பெய்துள்ளது. கடும் வெப்பம் காரணமாக வறண்டு காணப்பட்ட நிலங்கள் திடீர் மழையால் குளிர்வடைந்த போதிலும், காலம் பிந்தி பெய்த மழையால் விவசாயம் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தமை துரதிர்ஷ்டவசமானதே. (செ-4,60)

### ட்ரம்ப் நிர்வாகத்துடன் ...

கள் தொடர்பிலும், எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு ஏற்பட கூடிய அழுத்தம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

### நட்டத்துக்கு மகிந்த ...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே நிதியமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க மேலும் கூறுகையில்,

"அரச நிறுவனங்களில் 11,000 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் அல்ல, முன்னைய அரசாங்கத்தின் காலத்திலேயே இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நடைபெற்ற விடயங்களே இதற்குக் காரணம். இந்த விடயத்தை நான் நாடாளுமன்றில் தெளிவுபடுத்தியுள்ளேன். அந்த நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 8ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட கோப் குழுவின் அறிக்கையில் 15 மாதங்களுக்குள் 15 அரச நிறுவனங்களில் 11,000 கோடி ரூபாவிற்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

2015 மே மாதத்தில் இருந்து 2016 ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில், 15 அரச நிறுவனங்களின் இலாப நட்டம் தொடர்பான கோப் குழுவின் விசாரணையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

சதொச, மகநெகும, ஸ்ரீ லங்கா கிரிக்கெட் மற்றும் தேசிய லொத்தர் சபை போன்ற நிறுவனாங்களும் நட்டமடைந்துள்ள நிறுவனங்களில் அடங்குமெனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

சூரியபுர போன்ற விளையாட்டு மைதானங்களுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலைமையே இன்று காணப்படுவதாகவும் துறைமுக அதிகார சபையினாலா அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினாலா 53 பில்லியன் ரூபாய் செலுத்தப்படுகின்றது என வினா எழுவதாகவும் சுனில் ஹந்துன்னெத்தி குறிப்பிட்டார்.

இதனால் 530 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தற்ற திட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட சில விடயங்களுக்காக 57 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் வலியுறுத்தினார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு மில்லியன் கணக்கான டொலர்களும் மில்லியன் கணக்கான யூரோக்களும் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட சுனில் ஹந்துன்னெத்தி, அந்தப் பணம் செலவிடப்பட்ட விதம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் ஏற்பட்டுள்ள நட்டம் குறித்தும் இந்த கோப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

'ஜனாதிபதியே தீர்வு வழங்க வேண்டும்'

# மழைக்கு மத்தியிலும் நேற்று கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்

(பனிக்கன்குளம்)

நேற்று மழையின் மத்தியிலும் 14ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபடும் கேப்பாபுலவு மக்கள் ஜனாதிபதியே தீர்வு வழங்கவேண்டும் ஏனைய தலைமைகளால் எங்களுக்கு உரிய தீர்வை வழங்க முடியாது என தெரிவித்துள்ளனர்.

இராணுவத்திடமிருந்து விரைவில் எமது காணிகளை விடுவிக்க அரசுக்கு அழுத்தம் ஒன்றினை வழங்கும் பொருட்டும் எமது போராட்ட வடிவத்தை தீவிரப்படுத்தி எமது காணி விடுவிப்பை துரிதப்படுத்தும் வகையில் பாரிய போராட்டங்களை முன்னெடுக்க எமக்கு ஆதரவினை வழங்கும் அனைத்து சிவில் சமூக அமைப்புகளும் முன்வர வேண்டுமென கேப்பாபிலவு மக்கள் வேண்டுகோளும் விடுத்துள்ளனர்.

எமக்கு இதுவரையில் பல்வேறு தரப்பினரால் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இன்னும் பல சிவில் அமைப்புகளால் எமக்காக நேரில் வந்தும் ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் எமக்கான காணி விடுவிப்பு தொடர்பில் இதுவரையில் எந்தவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை. எமது பிரச்சினையை அரசு பாராமுகமாகவே பார்த்துவருகின்றது.

இந்த நிலையில் எமது போராட்டத்தை பல்வகைப்படுத்தி தீவிரப்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. இதன்மூலம்தான் அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எமது பிரச்சினை தொடர்பில் பாரிய அழுத்தம் ஒன்றினை வழங்க முடியும். எனவே எமக்கு ஆதரவாக குரல்கொடுக்கும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து எமக்காக பாரிய போராட்டங்களை முன்னெடுக்க அனைவரும் முன்வரவேண்டுமென கேப்பாபுலவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கேப்பாபுலவு பிலக்குடியிருப்பு மக்கள் தமது சொந்த நிலத்தை கையகப்படுத்தியுள்ள விமானப்படையினர் அதனை விடுவிக்கவேண்டுமென விமானப்படை முகாமின் முன்பாக கொட்டும் பனியிரவையும் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என அனைவரும் கடந்த 31ஆம திகதி தொடக்கம் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்தோடு நேற்றையதினம் முல்லை வலய கல்வி பணிப்பாளர் திருமதி உ. புவனராஜா போராட்டக் களத்துக்கு வருகைதந்து பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்ததோடு மாணவர்கள் பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோரை ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டிருந்தார்.

அத்தோடு மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பங்குத்தந்தைமார் மற்றும் அருட்சகோதரிகள் மக்கள் ஆகியோரும் வருகைதந்து மக்களுககான ஆதரவினை தெரிவித்த னர்.

அத்தோடு நேற்றையதினம் முல்லை மாவட்ட சட்டத்தரணிகள் வருகைதந்து மக்களுக்கான தமது ஆதரவினை வெளியிட்டிருந்ததோடு சட்ட உதவிகள் தேவைப்பட்டால் தாம் இலவசமாக உதவ தயாராக இருப்பதாகவும் மக்களிடம் தெரிவித்தனர்.

அத்தோடு சமூக வலைத்தளமூடாக ஒன்றிணைந்த இளைஞர் குழுவினரால் போராட்ட களத்திலுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் பல வழங்கப்பட்டன.

அத்தோடு இன்றும் பல பிரதேசங்களில் இருந்து மக்களும், சிவில் அமைப்புகளும் வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடிய தோடு பல உதவிகளையும் வழங்கி சென்றதோடு மக்களுக்கான ஆதரவும் பல்வேறு வழிகளில் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது. (செ - 281)

### ஐ.நா, ஐரோ. பிரதி ...

அமைக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் நிலையத்தை அவர்கள் திறந்து வைக்கவுள்ளார்.

இதனைத் தவிர அவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கும் விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## ஜனாதிபதி, பிரதமர்...

போதுமக்கள் சார்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி பிரேரணை ஒன்று முன் மொழியப்பட்டு அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும் அந்த அமர்வில் முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் சில வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் போராட்டகாரரின் இடத்துக்கு நேரடியாக விஜயம் செய்து அவர்களுடைய போராட்டத்துக்கு வலுச்சேர்த்தனர்.

அதன்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் கோரிக்கையை நிறைவேற்றி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமைச்சுக்களின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தனுக்கும் அவரச கடிதம் ஒன்று நேற்றைய தினம் அனுப்பப்பட்டது. கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண ஆளுநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை குறித்த மக்கள் தொடர்ச்சியாக போராடிவரும் நிலையில்,

அவர்களது குழந்தைகளும் வீதிகளில் உட்கார்ந்து போராடி வருகின்றனர். இதனால் அவர்கள் சுகாதார சீர்கேட்டை எதிர் நோக்கியுள்ளனர். மேலும் சிறுவர்கள் பாடசாலை செல்லாமலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகையால் இந்த போராட்டம் தொடர்பில் விரைவில் ஒரு முடிவு காணப்படல் வேண்டும் என பல தரப்பட்டவர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## ஜனாதிபதியின்...

டிக்கையால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு ஜனாதிபதியே தலையிட வேண்டியிருக்கின்றது. அதனால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கும் வரைக்கும் இல்லாமலாக்க கூடாது என்பதுவே எமது நிலைப்பாடாகும்.

அலரிமாளிகையில் எடுக்கப்படும் தீர்மானத்துக்கமையவே நிதி குற்றப்புலனாய்வு பிரிவினர் செயற்படுகின்றனர். அதனால் சட்டத்தின் ஆதிபத்தியம் நிறைவேற்று அதிகாரிகளால் இல்லாமலாக்கப்பட்டுள்ளது.

நாட்டில்சட்டத்தின்பிரகாரம்இடம்பெற வேண்டிய பல விடயங்கள் இன்று பிரதமரின் தேவைக்கேற்பவே இடம்பெற்றுவருகின்றன. அதேபோன்று நாட்டில் யாரையாவது கைது செய்வதென்றாலும் எந்த குற்றத்துக்காக கைது செய்வதென்றாலும் அது தொடர்பாக பொலிஸ் திணைக்களமோ அல்லது சட்டமா அதிபர் திணைக்களமோ தீர்மானம் எடுப்பதில்லை. மாறாக அலரி மாளிகையில் இருக்கும் குழுவே அது தொடர்பாக தீர்மானம் எடுக்கின்றது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (செ-11)

## இலங்கைக்கான...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீதான ஐ.நாவின் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மேலும் இரண்டு வருடங்கள் தேவை என இலங்கை அரசு கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை அரசு அந்த கால அவகாசத்தை கோரினால் அரசியல் அமைப்பில் முன்னேற்றம் இருந்தால் மட்டுமே இதற்கு ஆதரவு வழங்குவோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறியுள்ளார். அரசியலமைப்பில் என்ன நடைபெற்று கொண்டு உள்ளது என்பது தெரியாத நிலையில்தான் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கை அரசாங்கம் இரண்டு வருட கால அவகாசத்தைக் கோரி அதனை ஐ.நா மனித உரிமைப் பேரவை அதற்கு இணங்கப் போவது என்றால், இலங்கையில் ஐ.நாவின் கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். எங்களைப் பொறுத்த வரையில் கூட்டமைப்பின் தலைவரும், அதன் பேச்சாளரும் கூறியிருக்கிற கருத்து திட்ட வட்டமாக இலங்கை அரசாங்கத்திற்கு.

குறித்த இரண்டு வருட கால அவகாசத்தை வழங்குவதற்கு இணங்கியுள்ளதையும் அதனை நியாயப்படுத்துவதற்கு ஏற்கெனவே அவர்கள் இணங்கியிருப்பதை மூடிமறைப்பதற்கும் அந்த அவகாசத்தை தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு, தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் கடும் விமர்சனங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும், அவர்கள் நடத்துகின்ற நாடகம் தான் என்பது உறுதியாகும். அதுதான் ஐ.நா கண்காணிப்பு நாடகம் என்பதுமாகும்.

முதலாவதாக ஒன்றை சரியாக விளங்கி கொள்ள வேண்டும், 2015ஆம் ஆண்டு குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படும் போது தெளிவாக நாம் கூறியிருந்ததில் ஒன்று, உரிய நேரத்தில் உரிய நிலைப்பாடுகளை எடுக்காவிட்டால் ஆட்சி மாற்றத்தோடு, தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் என்பது நடுத்தெருவில் விடப்படும் என கூறி வந்தோம்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளக விசாரணைக்கு இணங்கியமையால்தான் சர்வதேசமும் அதனை கொண்டுவந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குறித்த விடயத்தை இலங்கை அரசிடம் கையளித்த பிற்பாடு அந்த நிகழ்ச்சிநிரலை தாம் நினைத்தபடி இலங்கை அரசு முன்னெடுத்து செல்கின்றது. சர்வதேச பங்களிப்பு இல்லை வேண்டுமென்றால் ஆலோசனை வழங்கலாம் என கூறியுள்ள நிலையில், இந்த அரசு எவ்வாறானது என்று தெரிந்திருக்க வேண்டும். அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லை என்று உலகிற்கு சொல்ல வேண்டிய நிலையில் இலங்கை அரசிற்கு மேலும் கால நீடிப்பை வழங்க அனுமதித்தால் அந்த துரோகத்திற்குரிய முழு பொறுப்பையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனை தமிழ் மக்களும் மிகத்தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்து என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். (செ-4)

## விடுதலைப் புலி...

ற்சியாகுமென பாராளுமன்ற உறுப்பினரும் தூய்மையான ஹெல உறுமய அமைப்பின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

தூய்மையான நாளைக்கான அமைப்பின கொழும்புத் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான புதிய கட்சியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளமையானது வரவேற்கத்தக்கதாகும். காரணம் அவர் இறுதி யுத்த காலத்தில் நாட்டின் கிழக்கு பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளிடத்திலிருந்து மீட்டெடுக்க பெரும் உதவி செய்தவர்.

தற்போது அவர் கட்சி ஆரம்பிக்க முற்படுகின்றமையானது மகிழ்ச்சிக்குரிய காரணம் புலிகளை வெற்றிகொள்ள உதவிசெய்துவிட்டு எமது தாய் தேசத்திற்கு வாழ்த்து கூறும் ஒருவர் கட்சி ஆரம்பிப்பதானது சாலப்பொருத்தமான செயற்பாடாகும்.

சிலவேளை கருணாவின் ஒத்துழைப்பு கிட்டியிருக்காவிட்டால் நாட்டின் கிழக்கு பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளிடத்திலிருந்து மீட்க முடியாது போயிருக்கும். அதனால் அவ்வாறான ஒருவர் தலைமையில் கட்சி நிறுவப்படுவது

23ம் பக்கம் பார்க்க...

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-7523)

தேவை
எமது ஸ்தாபனத்துக்கு சிட்டை எழுதுநர் தேவை. குறைந்தது இரு மொழிகளும் பேசத் தெரிந்தவர் விரும்பத்தக்கது. நேரில் சமுகம் தரவும்.
லிங்கன் கிறீம் ஹவுஸ்
213, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
(7839)

## மரண அறிவித்தல்



திருமதி

### அருமைத்துரை மகேஸ்வரியம்மா

மஞ்சவனப்பதி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கதிரிப்பாய் அச்சுவேலியை வதிவிடமாகவும் தற்போது விநாயக முதலியார் வீதி (V.M.Road), பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அருமைத்துரை மகேஸ்வரியம்மா நேற்று (13.02.2017) திங்கட்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருமைத்துரையின் அன்பு மனைவியும் விஜயகுமார் (லண்டன்), மாலினிதேவி (இலங்கை), வசந்தாதேவி (ஜேர்மனி), சந்திராதேவி, பாலகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளினசுந்தரி (லண்டன்), பாலசுப்பிரமணியம் ஐயர் (செல்வச்சந்நிதி கோயில்), கமலராஜா (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷிகா, விதுஷன், Dr. நிசாந்தி - நவநீதன், பவித்திரா - கஜேந்திரா, சரவணபவன், வேணுஜா, நிரோசா - மதனரூபன், நிதர்ஷன், நிதர்சினி, சஜிக்கா, றஷ்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சேயோனின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், பாக்கியம் மற்றும் செல்லம்மா, சரஸ்வதி, மயில்வாகனம், அன்னபூரணம், பரஞ்சோதி, காலஞ்சென்ற தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2017) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயக முதலியார் வீதி,
(V.M. Road), பருத்தித்துறை.

தகவல் - குடும்பத்தினர்
021 226 0387, 077 304 0534

(C-7543)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.